பக்கங்கள்: எட்டு

Registere as a News Paper in Sri Lanka

விலை ரூபா: 5-00

# வலம்புரி
VALAMPURI

சங்கு 02 வள்ளுவர் ஆண்டு 2032 கார்த்திகை 07 வியாழக்கிழமை (22-11-2001) தொலைபேசி: 3378 ஒலி 346

நாளுக்கு நாள் மாறும் நவ நாகரிக ஆடை வகைகளுக்கு:
காவேரி
பட்டுச் சோலை
48, பெரியகடை வீதி
யாழ்ப்பாணம்
T P 2333
(சி-2854)

## புலிகளின் தலைவர் பிரபாவுக்கு நாட்டில் பாதுகாப்பு இல்லை

### பிரதம நீதியரசர் தெரிவிப்பு

(கொழும்பு)

விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுக்குக் கூட பாதுகாப்பு இல்லையென்று பிரதம நீதியரசர் சரத் என் சில்வா தெரிவித்துள்ளார்.

முன்னாள் பிரதி சபா நாயகர் சரத்முனசிங்கவின் பாதுகாப்பு அரைவாசியாககுறைக்கப்பட்டமை தொடர்பான அடிப்படை உரிமைமீறல்மனு உயர் நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன் போது சரத்முனசிங்காவின் பாதுகாப்பு அதிகரிக்கப்பட வேண்டும் என்றும் அவருக்கு விடுதலைப் புலிகளால் அச்சுறுத்தல் இருப்பதா

(08ம் பக்கம் பார்க்க)

## நவ,30 முதல் ஜன.10 வரை நாட்டில் பெரும் கலவரம்

### சோதிடர் நாணயக்கார தெரிவிப்பு

(கொழும்பு)

நவம்பர் 30 ஆம் திகதி செவ்வாய்க் கிரகம் கும்ப ராசிக்குச் செல்கிறது அன்றிலிருந்து ஜனவரி 10ஆம் திகதி வரை இலங்கையில் அமைதி இருக்காது இவ்வாறு பிரபல சோதிடர் எஸ். டீ. நாணயக்கார தெரிவித்துள்ளார் இலங்கையின் இலக்கினம் கும்டப் இதிலிருந்து 4ஆம் இடப் எதிர்சசடசி அங்கே ானி நிற்கிறது செவ்வாய் நவப்டர் 30ஆம் (8ம் பக்கம் பார்க்க)

## ● செய்மதி மூலம் யாழ். மக்கள் ஜனாதிபதியிடம் கேள்வி

# தமிழ்மக்களின் இனப்பிரச்சினையை முதலில் ஏற்றுக் கொள்வது நானே!

### பதில் அளிப்பில் ஜனாதிபதி

(நமது நிருபர்)



வடக்குக் கிழக்கில் வாழுகின்ற தமிழ், முஸ்லிம் மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றக் கூடிய அரசியல் தீர்வு ஒன்று விரைவில் உருவாகும்.

இலங்கை சுதந்திரம் அடைந்த பின்னர்தமிழ்தி மக்கள் தொடர்ச்சியாக பல்வேறு ரமங்சிகளையும், கஷ்டங்களையும் அனுபவித்து வருகின்றனர். தமிழ் மக்களுக்கு இருக்கின்ற பிரச்சினைகளை நான் அறிவேன். இதனை ஏற்றுக்கொண்ட முதலாவது தலைவரும் நானே தான். இவ்வாறு ஜனாதிப சந்திரிகா குமாரதுங்கா நேற்று நண்பகல் செய்மதி மூலம் யாழ்ப்பாண மக்களுக்கு ஆற்றிய உரையின் போது கூறினார்.

நேற்று நண்பகல் ஜனாதிபதி சந்திரிகா செய்மதி மூலம் யாழ் குடாநாட்டு மக்களுடன் தொடர்பு கொணடு உரையாற்றினார்;

இதன்போது பொதுமக்கள் ஜனாதிபதி சந்திரிகாவிடம் சரமாரியான கேள்விக்கணைகளையும் தொடுத்துள்ளனர். இவற்றிற்குரிய பதில்களையும் ஜனாதிபதி உடனுக்குடன் அளித்துள்ளார்.

அங்கு அவர் மேலும்உரையாற்றும் போது, 1995 ஆம்

[08ம் பக்கம் பார்க்க]

## ஸ்ரான்லி வீதியில் கூடிநின்ற மக்களை மகேஸ்வரனின் ஆதரவாளர் தாக்கினர்

### பத்திரிகைகுறிப்பில ஈ. பி. டி. பி தெரிவப்பு

(யாழ்ப்பாணம்)

ஜனாதிபதியுடனான கேளவி பதில் நிகழ்வில்கலந்து கொள்வதற்காக யாழ் ஸ்ரான்லி வீதியில் கூடி நின்ற மக்கள் திரளை ஐ தே. கட்சியின் முதன்மை வேட்பாளர் தி மகேஸ்வரனின் ஆதரவாளர்கள ஊடறுத்துச் செல்ல முயனறதாக ஈ.பி.டி.பியின் யாழ் மாவட்ட தலைமைச் செயலகதி தகவல் தொடர்பு மையம் விடுத்த பத்திரிகைக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அப்பத்திரிகைக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்

(8ஆம் பக்கம் பார்க்க)

## மலேஷியமன்னர் காலமானார்

மலேஷிய மன்னர் சுல்தான் அப்துல்லாகுதீன் அப்துல் அஜீக்கா நேற்றுக் காலமானார். மன்னர் இறக்கும் போது அவருக்கு வயது 78 சுகவீனம் காரணமாக கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னர் அவருக்கு சிங்கப்பூர் வைத்தியசாலை ஒன்றில் இருதய சத்திர சிகிச்சை மேற்கொளளப்பட்டது இவரது மரணத்தை ஒட்டி ஒருமாத கால துக்கதினம் அறிவிக்கப்பட்டுளளது. (வ)

## ஐ. தே. கட்சி வேட்பாளர் கைது

புத்தளம் மாவட்ட ஐககிய தேசியக்கட்சி வேடபாளர் பாலிதரஞ்ஜித் பண்டார கைதுசெயயபபட்டுளளார்.

புத்தளம் மாவட்ட நீதி மன்ற உத்தியோகத்தரை தாககியமை, ஆர்ப்பட்டம் ஒன்றைகலைக்கச்சென்றஆனை மடுவ பொலிஸ்அதிகாரிகளை தடுத்துவைததிருந்தமை போனற குற்றச்சாடடுகளின் அடிப்படையிலேயே இவர் நேற்றுக்கைது செய்யபபட்டுளளார்.

இதேவேளை நீதிமன்ற உததியோகத்தரை தாககியமை தொடர்பாக மேற்படி நீதிமன்ற ஊழியர்கள் ஆர்ப்பாட்டம் ஒனறை நேற்று நடத்தியுள்ளனர். (ந-4

## ஜே.வி.பி தலைவர் நாடு திரும்புவார்

(கொழும்பு)

ஜே.வி.பி யின தலைவர் சோமவன்ச அமரசிங்க அடுத்தவாரம் இலண்டனில் இருந்து நாடு திரும்பவுளளார்.

கொழும்பு திரும்பும் அவர் உடனடியாகவே தேர்தல் பிரசாரங்களில் ஈடுபட வுள்ளார் (வ)

## காயமடைந்தவர் மரணம

(மட்டக்களபபு)

மட்டகளபபு ஏறவூர்பகுதியில் நேற்று முனதினம இரவு படையினா நடாததிய கண்மூடித்தனமான எறிகணைத் தாககுதலில் படுகாயமடைந்து மடடக்களப்பு வைத்திய சாலையில அனுமதிக்கப் பட்டிருந்த பெண ஒருவர் நேற்

(8ஆம பக்கம பார்க்க)

## புலிகளின்பதுங்கு குழி தாக்கி அழிப்பு

(யாழ்ப்பாணம்)

கிளாலி, எழுதுமட்டுவாள் பகுதியில படையினர் விடுதலைபபுலிகளின் பதுங்கு குழி ஒன்றை தாக்கி அழித்துளளனரென்று விசேட ஊடகத் தகவல்நிலையம் அறிவித்துள்ளது.

இத் தாக்குதலில் நான்கு

(8ஆம் பக்கம் பார்க்க)



இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் ஒரே தெரிவு

மதத்தியில் கூட்டாட்சியுடன், மானிலத்தில் சுயாட்சி காண..
ஐக்கிய இலங்கைக்குள்
சமாதான சகவாழ்வை நிலைநாட்ட...

வீணையே உங்கள் தெரிவு!
சேவையே எங்கள் இலக்கு!



X

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி)

(இ/2889)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# வங்கியின் வளர்ச்சியிலேயே மக்களின் உயர்ச்சி தங்கியுள்ளது

## வடவலயஉதவிப் பொது முகாமையாளர் இளம்பிறைநாதன் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

மக்கள் வங்கி மக்களுடைய வங்கி இங்கே ஊழியர்களும் அதிகாரிகளும் முக்கியமானவர்களில்லை. வங்கியின் பயன்பாட்டை நடைமுறைப்படுத்தும் பொதுமக்களே முக்கியமானவர்கள்.

இந்த வகையில் வங்கி எவ்வளவு தூரம் வளர்ச்சியடைகின்றதோ அவ்வளவு தூரம் அதன் வாடிக்கையாளர்களான பொதுமக்களும் வளர்ச்சியடைவார்கள் உயர்ச்சியடைவார்கள்.

மக்கள்வங்கியின்அச்சுவேலிக்கிளை திறப்பு விழா நேற்று மக்கள் வங்கி பிராந்திய முகாமையாளர் க.சிவபாதவிருதயர் தலைமையில் நடைபெற்ற போது, அதில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட மக்கள் வங்கி வடவலய உதவிப் பொது முகாமையாளர் ச.இளம்பிறைநாதன் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

பருத்தித்துறை வீதியில் நெல்லியடிக்கும் யாழ்ப்பாணத்திற்குமான நீண்டதோர் பாதையில் எந்தவொரு வங்கிக்கிளைகளும் இன்றி நீண்ட காலமாக இப்பகுதி மக்கள் தங்கள் வங்கித் தேவைகளுக்காகப் பட்ட இன்னல்களை நாம் அறிந்து அவற்றை நிவிர்த்தி செய்யும் வகையிலேயே அச்சுவேலியில் மக்கள் வங்கிக்கிளை ஒன்றைத் திறந்துள்ளோம்.

இப்பகுதியில் இவ்வாறான தோர் வங்கிக் கிளை திறக்கப்பட வேண்டியதன் அவசியப் பாட்டை அடிக்கடி வலியுறுத்தி வந்த யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளையை இச்சந்தர்ப்பத்தில் நாம் நன்றியுடன் நினைவு கூற வேண்டியுள்ளது.

இப்பகுதியில் ஒரு மக்கள் வங்கி கிளை ஆரம்பிப்பது தொடர்பான கருத்து மக்கள் வங்கியிடம் 1977 காலப்பகுதியிலேயே ஏற்பட்டது.

இருப்பினும், நாட்டுநடப்பு காரணமாக அது கைகூடவில்லை. இன்றும் புத்தூரில் மூடப்பட்ட எமது 107 ஆம் இலக்கக் கிளையையே இன்று மீள ஆரம்பித்துள்ளோம்.

ஏனெனில் புதிய கிளைகள் ஆரம்பிப்பதற்கான அனுமதியைமத்திய வங்கியிடமிருந்து பெறுவது அவ்வளவு சுலபமான விடயமல்ல.

மக்கள் வங்கி நீடித்த கருமபீடமாக இயங்கியபோதிலும் கடந்த ஒரு வருட காலத்தில் குறிப்பிடத்தக்க வளர்ச்சியைக் கண்டுள்ளமையேஇன்று புதிய கிளை திறப்புக்கு வித்திட்டது என்பதையும் அதற்கு ஆதாரமாய் அமைந்த வங்கி வாடிக்கையாளர்களையும், கிளை முகாமையாளர், பணியாளர்களையும் பாராட்டாது இருக்கமுடியாது என்றார்.

இந் நிகழ்வில், மேலதிக அரசாங்க அதிபர் து வைத்திலிங்கம், யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை, வலி. கிழக்குபிரதேச சபைத் தலைவர் பூ.குணசிங்கம் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

நன்றியுரையை கிளை முகாமையாளர் மு.சிவநேசன் நிகழ்த்தினார். (உ)

## சேருநுவரவில் தாக்குதல் தேடுதல் நடத்தியதில் ஆறு பேர் கைது

சேருநுவர பகுதியில் நேற்று முன்தினம் விடுதலைப்புலிகள் நடத்தியதாக்குதலை அடுத்து அங்கு தேடுதல் நடத்திய படையினர் சந்தேகத்தின் பேரில் 6 பேரைக் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட 6 பேரும் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்குட்படுத் தப்பட்டுள்ளதாக சேருநுவர பொலிஸ் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

இத்தாக்குதல் சம்பவத்தில் இராணுவச் சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டமை தெரிந்ததே. (உ-5)

## வங்கியாளர் பரீட்சை

இலங்கை வங்கியாளர் நிலையத்தினால் நடத்தப்படுகின்ற வங்கி அலுவலர்களுக்கான இறுதிப் பரீட்சை பகுதி 2 எதிர்வரும் 24, 25 ஆம் திகதிகளில் வேம்படி மகளிர் கல்லூரியில் காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது. (உ-5,19)

## எமது அடிப்படை

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

போதியளவு தூரம் சென்று, போதியளவு நேரம் மீன் பிடிக்கமுடியாதநிலை காணப்படுகின்றது.

குடாநாட்டில் பகலில் கூட யுவதிகள் இன்று சுதந்திரமாக அச்சமின்றி நடமாட முடியாத நிலை.

திருட்டுக்கள், களவுகள், கொலைகள், பெண்களைக் கடத்தல், கசிப்பு உற்பத்தி, வழிப்பறிக் கொள்ளைகள், பாலியல் வல்லுறவுகள், கோஷ்டி மோதல்கள, ஆபாசப் படங்கள்என்பன அதிகரித்துள்ளது. இவற்றை எவராலுமே கட்டுப்படுத்த முடியாதுள்ளது.

கலாசார சீரழிவுகளால் எமது குடாநாட்டு மாணவர்களினது கல்வித்தரம் வீழ்ச்சியடைந்து செல்கின்றது.

இத்தகைய அன்றாடப்பிரச்சினைகளிலும்எது முழுமையாகவோ, முற்றாகவோ தீர்க்கப்பட்டது? எதுவும் தீர்க்கப்படவில்லை. மாறாகப் புதுப்புது வடிவில் அன்றாடப் பிரச்சினைகள்உருவாகிக்கொண்டு தானிருக்கின்றது எமது உரிமைப் பிரச்சினைகளுக்கு நிரந்தரத் தீர்வு காணப்படும் வரை இதனை எவராலும் தீர்க்கவே முடியாது. தீர்ப்பதாக வண்ண போஸ்டர்கள் ஒட்டலாம், கட்டவுட்களை நிறுவைத்து மக்களை ஏமாற்றலாம்.

எனவே மக்களே சிந்தியுங்கள், செயற்படுங்கள் நிரந்தர சமாதான முயற்சியை குழப்பியடிக்க முயல்பவர்களை இனம்கண்டுஅன்றாடப் பிரச்சினைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்காது அடிப்படைப் பிரச்சினைகளைத் தீர்க்கக் கூடியதான,

புலிகள் மீதான தடை நீக்கம்,

தமிழ் மக்கள் மீதான பொருளாதாரத் தடை நீக்கம்,

புலிகளுடன் பேச்சுக்களை ஆரம்பித்தல்,

என்ற விடயத்தில் எமது ஒற்றுமையை வெளிப்படுத்துவோம்.

தேர்தலில் அனைவரும் வாக்களிப்போம்,

எனக் கேட்கப்பட்டுள்ளது. (ந)

## சர்வதேச லயன்ஸ் கழக தலைமையகத்தின் நிதியுதவியுடன் நீரிழிவு நிலையம் அமைக்க ஏற்பாடு

(தென்மராட்சி)

அமெரிக்காவிலுள்ள சர்வதேச லயன்ஸ் கழகங்களின் தலைமையகத்தின் நிதியுதவியுடன் யாழ்ப்பாணத்தில் நீரிழிவு நிலையம் ஒன்று அமைக்கப்படுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுவருகின்றன.

இந் நிலையத்தினை யாழ்ப்பாணத்தில் அமைக்க வேண்டுமென லயன்ஸ் கழகங்களுக்கான சுகாதார மற்றும் நீரிழிவு விழிப்புணர்வுத் திட்டத்தின் மாவட்டத் தலைவரான லயன் டாக்டர் எஸ். எஸ். அருளானந்தம் வலியுறுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

இத்திட்டத்தினை நிறுவுவதற்கான பொருத்தமான இடம் தற்போது தேடப்பட்டு வருவதாகவும் அறியப்படுகின்றது.

இதேவேளை, யாழ்ப்பாணக் குடாநாட்டில் நீரிழிவு நோயினால் பாதிக்கப்பட்டு வருபவர்களின்தொகை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாகவும் வைத்திய வட்டாரங்களில் இருந்து தெரிய வந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

இது இவ்வாறிருக்க இலங்கையில் இதுவரை சுமார் 10 இலட்சத்துக்கு மேற்பட்டவர்கள் நீரிழிவு நோயினால் பீடிக்கப்பட்டவர்களாக இருக்கின்றனர் எனப் புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன. (உ-77)

## கூட்டம்

(யாழ்ப்பாணம்)

மனித வளத் தகவல் பற்றிய விபரங்களை வடக்கு கிழக்கு மாகாணத்தில் கடமையாற்றும் சகல உத்தியோகத்தர்களிடமிருந்தும் பெற்றுக்கொள்வதற்கு மாகாணப் பொது நிர்வாக உள்ளூராட்சி அமைச்சு தீர்மானித்துள்ளதற்கு அமைவாக,

சகல யாழ். வலயப் பாடசாலைகளுக்கும் தேவையான படிவங்களை வழங்குவதற்கும் அறிவுறுத்தல்களை வழங்குவதற்குமான கூட்டம் இன்று யாழ். வலயக்கல்வி அலுவலகத்தில் காலை 9.00 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது. (உ-9)


## 2 வது பிறந்தநாள் வாழ்த்து

நயினாதீவு 1 ஆம் வட்டாரத்தைச் சேர்ந் ச.துரைரெத்தினம் உமாதேவி தம்பதியினரின் அன்புப் பேரன்

### செல்வன் லக்ஷனன்

தனது 2 வது பிறந்த நாளை இன்று 22.11.2001 வியாழக்கிழமை தமது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறார். லக்ஷனனை அன்பு அம்மா, பெரியம்மா, அம்மப்பா, அம்மம்மா, உற்றார், உறவினர் அனைவரும் நயினை நாகபூஷணி அம்பாள் அருள் பெற்று, பல்கலையும் பெற்று பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

ச. துரைரெத்தினம் உமாதேவி
குடும்பத்தினர்,
(வேலணை பிரதேச சபை உறுப்பினர்)

முகவரி
"கமலபதி"
1 ஆம் வட்டாரம்
நயினாதீவு.

(இ- 2909)



## வேலணை பிரதேச சபை
### சந்தைகள் இறைச்சிக் கடைகளிற்கான
# கேள்வி அறிவித்தல் - 2002

வேலணை பிரதேச சபையின் நிர்வாக எல்லைக்குட்பட்ட சந்தைகள், இறைச்சிக் கடைகள் என்பவற்றை 01-01-2002 முதல் 31-12-2002 வரையான காலப்பகுதிக்கு குத்தகைக்கு விடுவதற்கான கேள்விகள் 03-12-2001 ஆம் திகதி நண்பகல் 12.30 மணிவரை எம்மால் ஏற்றுக் கொள்ளப்படும். அன்றைய தினமே பி.ப.2.00 மணிக்கு கேள்விச் சபையில் கேள்விகள் திறந்து பரிசீலிக்கப்படும். அத்தருணத்தில் கேள்விக்காரரோ அல்லது அவரின் பிரதிநிதியோ சமுகமளிக்கலாம்.

கேள்விப் பத்திரங்கள் 28-11-2001 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிவரை வேலணை பிரதேச சபை தலைமை அலுவலகத்தில் கீழ்க்குறிப்பிட்டகேள்விவைப்புப் பணம், கேள்விப் படிவக் கட்டணம் ஆகியவற்றை பணமாக செலுத்துவதன் மூலம் பெற்றுக் கொள்ளலாம்.

கேள்விப் படிவங்கள் இணைப் பிரதிகளில் தயாரித்து மூலப்பிரதியைஇவ் அலுவலக கேள்விப் பெட்டியிலும் இணைப் பிரதியை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், இல:29 செட்டிதெரு, நல்லூர் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவேண்டும். இவை பற்றிய மேலதிக விபரங்களை தலைமை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

| இல: | குத்தகை விபரம் | கேள்விப் பத்திரபபணம் (மீளளிக்கப் படாதது) | கேள்விப் பிணை (மீளளிககக் கூடியது) | ஆகக்குறைந்த கேளவித தொகை |
|---|---|---|---|---|
| | 01) சந்தைகள் | | | |
| 01 | வேலணை, துறையூர் மீன்சந்தை | 100/- | 1000/- | 125 000/- |
| 02 | வேலணை செட்டிபுலம் ,, | 100/- | 750/- | 30 000/- |
| | புங்குடுதீவு உபஅலுவலகம் | | | |
| 01 | புங்குடுதீவு மீனசநதை | 100/- | 750/- | 25 000/- |
| | நயினாதீவு உபஅலுவலகம் | | | |
| 01 | நயினாதீவு வடக்கு மீனசநதை | 100/- | 1 000/- | 30 000/- |
| 02 | நயினாதீவு தெற்கு ,, | 100/- | 1 000/- | 35 000/- |
| | அல்லைப்பிட்டி உபஅலுவலகம் | | | |
| 01 | அல்லைப்பிட்டி மீன்சந்தை | 100/- | 750/ | 15 000/- |
| | 2) இறைச்சிக்கடை | | | |
| 01 | புங்குடுதீவு மாட்டிறைச்சி விற்பனை | 100/- | 1 000/- | 35 000/- |

திரு. ந. கருணாகரகுருமூர்த்தி (ஜே.பி. யு. எம்.)
தலைவர்,
வேலணை பிரதேசசபை.

வேலணை பிரதேச சபை,
21-11-2001.

(சி 2908)

# எமது அடிப்படைப் பிரச்சினைக்கு முடிவுகட்ட

# உரிமைப்பிரச்சினை தீர்க்கப்படவேண்டும்!

## யாழ். பல்கலைக்கழக மாணவர்ஒன்றியம் அறிக்கை

(யாழ்ப்பாணம்)

தமிழ்மக்களின் உரிமைப் பிரச்சினைக்குத் தீர்வுகாணப்படும்வரை எமது அடிப்படைப் பிரச்சினைக்கு எவராலுமே தீர்வுகாணமுடியாது. இதனை தமிழ்மக்கள் உணர்ந்து செயற்பட வேண்டும்.

புலிகள் மீதான தடைநீக்கம் தமிழ்மக்கள்மீதான பொருளாதாரத் தடைநீக்கம், புலிகளுடன் பேச்சுகளை ஆரம்பித்தல் ஆகியவற்றின் மூலமே தமிழ்மக்கள் தமது அடிப்படைப் பிரச்சினைக்குத் தீர்வுகாணமுடியும்.

இவ்வாறு யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் எஸ். கஜேந்திரன் விடுத்த அறிக்கைஒன்றில் தெரிவித்துள்ளார்.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது;

'கடந்த பல வருடங்களாக யுத்த சூழலுக்கும் அதனால் பல நெருக்கடிகளுக்கும் உள்ளாகி துன்ப துயரங்களில் நாளாந்தம் வாடி வதங்கிக்கொண்டிருக்கும் தமிழ் மக்களிடம் இன்னொரு பொதுத் தேர்தலுக்காக வாக்குக் கேட்டு பல வேட்பாளர்கள் வீட்டு வாசற்கதவை நித்தமும் தட்டிக்கொண்டிருக்கிறார்கள். இவர்களில் ஒரு சிலர் அன்றாடப் பிரச்சினைகளை முதன்மைப்படுத்துகின்றார்கள். வேறுசிலர் தமிழ் மக்களின் உரிமைபபிரச்சினைகளுக்கு முன்னுரிமை கொடுக்கின்றார்கள். உரிமைப்பிரச்சினைதான் தமிழ் மக்களின் அடிப்படைப்பிரச்சினை.

அன்றாடப் பிரச்சினைகள் உருவானது எப்படி? யுத்த சூழ்நிலையே அன்றாடப் பிரச்சினையை தோற்றுவித்தது யுத்த சூழ்நிலை தமிழ் மக்களின் பிரதேசங்களில் தோற்றம்பெற்றது எவ்வாறு? தமிழ்மக்களுடைய உரிமைக் குரல்கள் கடந்தகாலங்களில் பேரினவாதிகளால் ஆயுத முனையில் அடக்கப்பட்டமையால்தான் அடிப்படைப் பிரச்சினையான உரிமைப்பிரச்சினையாசபூதாகாரமாக உருவெடுத்தது. அது 40 களில் பிரஜாவுரிமைப் பிரச்சினையாக உருவெடுத்து 50 களில் மொழிப்பிரச்சினையாகவும்; 60 களில் தமிழர்கள் வேலைவாய்ப்புக்களில் முற்றாக புறக்கணிக்கப்பட்டமை மூலமும், 70 களில் தரப்படுத்தல் மூலம் தமிழ் மாணவர்களின் உயர்கல்வி வாய்ப்புக்கான கதவுகள் அடைக்கப்பட்டதன் மூலமும் தமிழ் மக்களின் அடிப்படைப் பிரச்சினை இலங்கையின் இனப்பிரச்சினையாக விசுவரூபம் எடுத்தது. 80 களில் இருந்து இன்றுவரை கொடூரமான இராணுவ ஒடுக்குமுறையின் காரணமாக தமிழ்மக்களின் உரிமைப் போராட்டம் விடுதலைப் போராட்டமாக வடிவம் பெற்றது. இக்கொடிய யுத்த சூழ்நிலைதான் அன்றாடப் பிரச்சினைகளை தோற்றுவித்தது.

தமிழ் பிரதேசங்கள் மீது பேரினவாதிகளால் விதிக்கப்பட்ட பொருளாதாரத்தடை மூலம் உணவு, மருந்து, மற்றும் நாளாந்தப் பாவனைப் பொருட்கள் அனைத்தும் தடைசெய்யப்பட்டன. இந்தத்தடை முற்றாக நீக்கப்படவில்லை. இன்னமும் தொடர்ந்துகொண்டே இருக்கிறது.

இன்றும் எரிபொருள் விநியோகத்திற்கு இராணுவம் பலத்த கட்டுப்பாடுகளை விதித்துள்ளது. இது குடாநாட்டிற்குள் போக்குவரத்துப் பிரச்சினையை தோற்றுவித்துள்ளது.

குடாநாட்டிற்கு வெளியே சென்று வருவதற்கான போக்குவரத்துப் பிரச்சினை இன்றும் உள்ளது. இது அன்றாடப் பிரச்சினை இல்லையா?

யாழ். போதனா வைத்தியசாலை உள்ளிட்ட ஏனைய சகல ஆதார வைத்தியசாலைகளிலும் மருந்துப் பொருட்களுக்கும், வைத்திய நிபுணர்களுக்கும் பலத்த தட்டுப்பாடு நிலவிக்கொண்டே இருக்கின்றது.

கடந்த ஐந்து வருடங்களாகியும் இலனும் பல பகுதிகளுக்கு மின்சாரம் வழங்கப்படவும் இல்லை, ஏனைய பகுதிகளுக்கு நீண்டநேரம் மின்வெட்டு அமுலில் உள்ளது.

குடாநாட்டை இராணுவம் ஆக்கிரமித்து ஐந்து வருடங்களாகியும் பல இடங்களுக்கு தொலைபேசி வசதிகள் இன்னும் வழங்கப்படவும் இல்லை. ஏனைய பகுதிகளுக்கு வழங்கப்பட்டுள்ள தொலைபேசி இணைப்புக்கள் அடிக்கடி துண்டிக்கப்பட்டு வருவதுடன் சீரற்றுக் காணப்படுகின்றது.

குடாநாட்டில் இடம்பெயர்ந்து வாழும் மக்களுக்கு தரம் குறைந்த நிவாரணப் பொருட்களும் வழங்கப்படுகின்றன.

பாடசாலை மாணவர்களுக்கான பாடப்புத்தகங்கள் விநியோகத்தில் நீண்டகால தாமதமும் சீருடை விநியோகத்தில் சீரற்ற முறைகளும் பின்பற்றப்படுகின்றது.

ஊரடங்கு சட்டம் நடைமுறையில் இருப்பதால் விவசாயிகள் தமது உற்பத்திப் பொருட்களை உரிய நேரத்தில் சந்தைப்படுத்த முடியாதுள்ளது;

குடாநாட்டிற்குள்ளேயே இராணுவத்தினரின் ஆக்கிரமிப்பிலுள்ளதும், ஆயுதமேந்திய அரசியல் கட்சிகளால் மக்களை அடக்கி ஆளும் பிரதேசங்களிற்குகூட, நினைத்த போது நினைத்த நேரத்தில் அவசிய தேவைகளுக்கு கூட பிரயாணம் செய்யமுடியாத நிலை காணப்படுகின்றது.

இரவுநேர ஊரடங்கு காரணமாக எத்தனையோ கர்ப்பிணித் தாய்மார்கள் வீட்டிலேயே பிரசவம் நிகழ்ந்து இரத்தப்பெருக்கு காரணமாக இறந்துள்ளார்கள். எத்தனையோ நோயாளர்கள இரவில் பயணிக்க முடியாத நிலையில் இறந்துள்ளார்கள்.

கடற்றொழிலளர்கள் தமக்கு வசதியான நேரத்தில்

[2ம் பக்கம் பார்க்க]

### கடந்த கால

# படிப்பினைகளை கருத்திலேற்று

# ஒருமித்து ஓரணியில் செயற்படுக!

## தேர்தல்குறித்து தொ.நுட்பகல்லூரி மாணவர் அறிக்கை

(யாழ்ப்பாணம்)

எதிர் வரும் தேர்தல் கடந்த சாலங்களில் நடைபெற்ற ஏனைய தேர்தல்கள் போலல்லாது மக்களாகிய உங்களது வாக்குரிமைகளை சரியான முறையில் பயன்படுத்த வேண்டிய வரலாற்றுத் தேவை எழுந்துள்ளது.

ஏனெனில் கடந்த தேர்தல்களில் தங்களைத் தாங்களே தெரிவு செய்து பாராளுமன்றம் சென்றவர்கள் செய்தவற்றை மக்கள் ஒரு போதும் மறந்து விடமாட்டார்கள்.

யாழ். தொழில்நுட்பக் கல்லூரி மாணவர் ஒன்றியத்தின் சார்பாக அதன் உபதலைவர் எம். சுதாகரனால் விடுக்கப்பட்ட அறிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அவ் அறிக்கையில் மேலும், அபிவிருத்தி என்ற பெயரில் உலகநாடுகளால் கொடுக்கப்பட்ட நிதியை மோசடி செய்தும் அடியாட்களை திரட்டுவதிலும் பயன்படுத்தினார்கள.

அத்துடன் தமிழ்மக்களின் ஏகப்பிரதிநிதிகள் தாம் எனக் கூறிக்கொண்டு மக்களின் அடிப்படை உரிமைகளைக் கூட நசுக்கினார்கள். ஆனால் தேர்தல் வரும் காலங்களில் மத்தியில் கூட்டாட்சி மாநிலத்தில் சுயாட்சி என நாடகம் ஆடுகின்றனர்.

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

**தேர்தல் வியூகம்**

# வாக்குறுதிகளை வழங்கி விட்டு ஏமாற்றும்

# வடு தமிழ் நெஞ்சங்களில் மாறவில்லை!

## உயர் தொழில் நுட்ப மாணவர் ஒன்றியம் அறிக்கை

[யாழ்ப்பாணம்]

தமிழ் மக்களின் உணர்வுகளைஉலகநாடுகள் மதிக்காத போதிலும், விடுதலைப் புலிகள் எமது உரிமைக்காகவும் சுதந்திரத்திற்காகவும் போராடி வருகின்றனர்.

தமிழ் மக்கள் ஒன்றுபட்டு விட்டார்களென்றுசிங்களப் பேரினவாதம்அதிர்ந்துபோயிருக்கும் இவ்வேளையில் மக்கள் தமதுவாக்குகளை தகுந்த முறையில் வழங்க வேண்டும். இவ்வாறுயாழ் உயர்தொழில் நுட்ப மாணவர் ஒன்றியத் தலைவர் எஸ். சிவானந்தம் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது;

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது;

வரவிருக்கின்ற பாராளுமன்ற பொதுத் தேர்தல்தமிழ் மக்களின் மனங்களில் ஓர்உண்மைத் தன்மையை உணர்த்தி நிற்கப் போகின்றது. காலம் காலமாகப் பாராளுமன்றத் தேர்தல் நடை பெறுவதும், அது உப்புச்சப்பற்று அமைவதும் கடந்த கால வரலாறுகள் ஆகும்.

தேர்தல் என்றுவரும்போது பொய் வார்த்தைகளைக் கூறி ஆட்சியைக் கைபபற்றுவதும் வாக்குக் கேட்கவருபவர்கள் பின் தாம்சொல்லும வாக்குறுதிகள் அனைத்தையும் மறந்து விடுவதும் தமிழ் மக்களின் நெஞ்சங்களில் மாறாத வடுக்களாகவே இன்று வரை பிரதிபலிக்கின்றன.

தற்பொழுது அடுத்ததேர்தலுக்குத் தடல் புடலாகத் தம்மைத் தயார் படுத்திக்கொண்டிருக்கின்றவேளையிலேதமிழ் மக்கள் சிந்தித்து செயற்பட வேண்டிய காலம் இதுவாகும் உலகத்தின் கண்களிலேதமிழரின் ஏகப்பிரதிநிதிகள்என்று தம்மை கூறிக் கொண்டுஅற்ப சொற்ப சலுகைகளுக்காக பாராளுமன்றக் கதிரைகளை அலங்கரித்து கொண்டிருப்போர் நாளை என்னதான் செய்துவிடப் போகிறார்கள்.

தமிழ் மக்கள் இன்று சொல்லொணாத் துன்பங்கள் மத்தியில் உழன்று கொண்டிருக்கின்ற போதுஅவர்களின்குரல்வளைகள் இரும்புக்கரம் கொண்டு நசுக்கப்பட்டுள்ளது.

வெறும் நடைப்பிணங்களாகவும். எதையும் வெளியில் கூற முடியாதவர்களாகவும் பல்லாண்டு காலமாக தமிழர்கள் அடிமைப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் இன்று பல் வேறுநாடுகள் தமிழ்மக்களின் உணர்வுகளை மதிக்காமல் செயற்படுகின்ற போதும்.தமிழீழ விடுதலைப் புலிகள் தமிழ் மககளின் உரிமைக்காகவும் சுதந்திரத்திற்காகவும், சுபீட்சத்திற்காகவும் போராடிக்கொண்டிருக்கின்ற இவ்வேளையிலே தமிழ் மககளின் பின்னால் அன்றும, இன்றும், என்றும் நிலைத்திருக்க கூடியவர்கள் யார் என்று தெரியாமல் தமிழன் ஒற்றுமைப்பட்டு விட்டான் என்று சிங்களப் பேரினவாதம் அதிர்ந்துபோய் நிற்கின்றது

இத்தருணத்திலே தமிழ்மக்களாகிய நாம் எமது உரிமைகளுக்கு எதிராக யார் செயற்படுகின்றார்களோ அவர்களை இனங்கண்டு அவர்களுக்கு உங்களது வாக்குகளை வழங்காது சிந்தித்துச் செயற்படுமாறு கேட்டுகொள்கின்றோம என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது; [ந]

---

### சிற்றி ஒவ் றிங்கோ 15 வரை சேவையில்

(யாழ்ப்பாணம்)

''சிற்றி ஒவ் றிங்கோ'' பயணிகள் கப்பல், அடுத்த மாதம் 15ஆம் திகதி வரை சேவையில் ஈடுபடுமென்று தான் அலுவலகம் அறிவித்துள்ளது.

கப்பலில் திருத்த வேலைகள் நடைபெற இருப்பதால் அடுத்த மாதம் 16ந் திகதி முதல் 30ந் திகதி வரை இரு வாரங்கள் சேவை இடைநிறுத்தப்பட்டு, மீண்டும் அடுத்த வருடம் ஜனவரி மாதம் முதல் வாரத்தில் சேவை இடம் பெறுமென்று தெரிவிக்கப்பட்டுளளது.

(இ)

### தேர்தல் வன்முறை அதிகரிப்பு

(கொழும்பு)

வேட்பு மனுத்தாக்கல்செய்யப்பட்ட தினத்திலிருந்து நேற்று முன்தினம் காலை வரை தேர்தல் வன்முறைகள் 975 ஆக அதிகரித்துள்ளதாக பொலிஸ் தேர்தல் தலைமையகம் அறிவித்துளளது.

கடந்த வருடத்தில் இடம் பெற்ற தேர்தல் வன்முறைகளைவிட இவ்வருடம் வன்முறைகள் அதிகரித்துள்ளதாக தேர்தலைக் கண்காணிக்கும் ஐரோப்பியஒன்றியம்தெரிவித்துளளமை குறிப்பிடத்தக்கது:

(ந-4)

### சத்தியசாயியின் 76 வது அவதாரதின விழா

(யாழ்பபாணம்)

பகவான ஸ்ரீ சததிய சாயி பாபாவின் 76 வது அவதார தின விழா நாளை வெளளிக்கிழமை திருநெல்வேலியிலுளள யாழ்பபாணம் பகவான் ஸ்ரீ சததிய சாயி சேவா நிலையததில வெகு விமரிசையாகக் கொண்டாடப்படவுளளது.

இவ் விழாவில் அகில இலங்கை சததிய சாயி சேவா நிறுவனங்களின ஆலோசகர் செ.சிவஞானம பகவான் பாபா பற்றிய சிறபபுச் சொற்பொழிவை நிகழ்தவுளளார்.

அத்துடன்மனிதனுள உள்ளுறையும தெய்வீகம என்னும நூல் வெளியீடும இடமபெறவுளளது.

பாபா பற்றிய வீடியோ படக்காடசி, மற்றும பாலவிகாஸ் மாணவர்களின் கலை நிகழ்ச்சியும் இடம பெறவுள ளன. (செ-77-103)

### குறுங்கவிதை போட்டி

(யாழ்பபாணம)

தெளிவு. பத்திரிகை, இன்று 'சுறிஸ்த்து எங்கேடறபபா' எனற கருப்பொருளில குறுங் கவிதைபபோட்டியொன்றை நடததுகின்றது. எதிர்வரும 25 ஆம திகதி ஞாயிற்றுககிழமைக்கு முன்பதாக 'தெளிவு' சென்ஜேமஸ் தேவாலயம நல்லூர் எனற முகவரிக்கு கவிதைகளை அனுபபி வைககமுடியும. (உ-106)

### திருநிலைப்படுத்தும் வழிபாடு

(யாழ்பபாணம)

யாழ் மணணில் உதவிக் குருக்களாக மூவரைத திருநிலைபபடுத்தும வழிபாடு ஆயர் அதிவண இலிப டி. சில்வேரா ஆண்டகையினால் எதிர்வரும் 25 ஆம திகதி ஞாயிற்றுக்கிழமை புனித பரியோவான தேவாலயததில் நடாத்தப்படவுளளது.

இவ்வழிபாட்டில் ரி. போல் பிரியம்ஜற், அ. ஸ்ரீபன், என். ஜெ.ஞான காருணியன் ஆகியோர் திருநிலைப் படுத்தபபடுவர்.

இவர்கள் கண்டி பிலிமதத லாவை இறையியல கல்லூரியில் இறையியல கற்றுமுடிதத வர்களும், இலங்கைத திருச்சபையின் யாழ் மறை மாவட்டத்தைச் சேர்ந்தவர்களும் ஆவர். (உ-106)

# தமிழ் மக்களின் உரிமையைப் பாதுகாக்கவே ஆயுதப்போராட்டம் முன்னெடுக்கப்பட்டது

## கனடாத்தூதுவருக்கு யாழ்.பல்கலை மாணவர் ஒன்றியம் கடிதம்

(யாழ்ப்பாணம்)

சிறிலங்கா அரசு தமிழ் மக்கள் மீது பயங்கரவாதத்தை கட்டவிழ்த்து விட்டு அப்பாவித் தமிழ் இளைஞர் யுவதிகளைக் கைது செய்தும் சித்திரவதை செய்தும்வருகிறதுஇந் நிலையில் விடுலைப் புலிகள் மீது தாங்கள் விதித்துள்ள தடை எமக்குப் பெரும் கவலையைத் தருகிறது. இவ்வாறு விடுதலைப் புலிகள் மீது கனடா விதித்ததடையைக் கண்டித்து யாழ். பல்கலைக் கழகமாணவர் ஒன்றியம். இலங்கைக்கான கனடாத்தூதுவருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒன்றியத் தலைவர் எஸ். கஜேந்திரன்செயலாளர் எம்: சுகுனேஸ்வரன் ஆகிய இருவரும் கையெழுத்திட்டனுப்பிய அக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது

கடந்த வாரம் தங்களது அரசாங்கம் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தினரை கனடாவில் தடைசெய்துள்ளதாக வந்த அறிவிப்பு தமிழ் பேசும் மக்கள் மனதில் பேரிடியாக அமைந்துள்ளது. 1948 ஆம் ஆண்டு இலங்கை சுதந்திரமடைந்தது முதல் மாறி மாறி ஆட்சிக்கு வந்த சிங்களத்தலைவர்கள் இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களை முற்றாக அழித்தொழிக்கும் பணியிலேயே மிகத்தீவிரமாக ஈடுபட்டு வருகின்றார்கள். தனிச்சிங்களச் சட்டம் திட்டமிட்ட சிங்கள குடியேற்றம் போன்றவற்றால்தமிழ் மக்களின் உரிமைகளும் நிலங்களும் பறிக்கப்பட்டன இவற்றுக்கெதிராக அப்போதுசாத்வீக வழியில் பல போராட்டங்கள முன்னெடுக்கப்பட்ட போதெல்லாம் சிங்கள அரசு பொய்வாக்குறுதிகளை வழங்கியும், போராட்டங்களை குழப்பியும் தமிழ் மக்களை ஏமாற்றி எம இனம் விழிப்புடன் செயல்பட வேண்டிய சூழ்நிலையை உருவாக்கியது.

அகிம்சை வழியில் நாம் முன்னெடுத்த போராட்டங்கள் அடக்கப்பட்டதாலும்; அதனால் ஏற்பட்ட மக்கள் எழுச்சியும் தமிழ் மக்களின் உரிமைகளையும் உடமைகளையும் பாதுகாக்க மீளப்பெற ஆயுதரீதியாகவே போராட்டங்களை முன்னெடுக்க வேண்டிய ஓர் கட்டாய நிலைக்குஅப்போதையஇளைஞர்கள் தள்ளப்பட்டார்கள்: இதன் வெளிப்பாடே தமிழீழ விடுதலைப் புலிகளின் தோற்றம்.

ஸ்ரீலங்கா அரசுதமிழ் மக்கள் மீது அரச பயங்கரவாதத்தை கட்டவிழ்த்து விட்டுள்ளதன் மூலம் நாளாந்தம் எமது மக்கள் சொல்லொணாத் துன்பங்களை அனுபவித்து வருகின்றனர்; அரசு அப்பாவி மக்கள் மீதும் குடியிருப்புகள் மீதும் கண்மூடித்தனமான குண்டுத்தாக்குதல்களையும் எறிகணைத் தாக்குதல்களையும் நடத்திக் கொண்டு வருகிறது.

மறுபுறம் இலங்கையின் வடக்கு-கிழக்கு பகுதிகளிலுள்ள தமிழ் பேசும் மக்களின் அடிப்படை மனித உரிமைகள் மீறப்பட்டு வருகின்றது. அவசரகாலச் சட்டம், பயங்கரவாதத்தடைச்சட்டம் என்பற்றின் கீழ் அப்பாவித் தமிழ் இளைஞர்களும் யுவதிகளும் காரணமின்றிக் கைது செய்யப்படுதல், சித்திரவதை செய்யப்படுதல், தமிழ் பெண்கள் பாலியல் வல்லுறவிற் குட்படுத்தப்பட்டு கொலை செய்யப்படுதல், சிறைகளில் விசாரணையின்றி அடைக்கப்படுதல் என்பன தொடர்ந்த வண்ணமே உள்ளது. இன்று யாழ்:குடா நாடு ஓர் திறந்த வெளிச்சிறைச்சாலையாகவே உள்ளதுடன் இங்கு வாழும் இலட்சக்கணக்கான மக்களும் வெளியிடங்களுக்கான போக்குவரத்து வசதியின்றி பெரும் சிரமப்பட்டுக் கொண்டு இருக்கின்றனர். யாழ்.குடாநாடு அரசபடைகளால் ஆக்கிரமிக்கப்பட்ட கடந்த 5 வருட காலப் பகுதியில் குடாநாட்டு மக்களின் நடமாடும்சுதந்திரம் பறித்தெடுக்கப்பட்டுள்ளது. பல அத்தியாவசியப்பொருட்களுக்குதட்டுப்பாடு நிலவுவதுடன் விலைகளும் உயர்வாகவேஉள்ளது; யாழ். போதனா வைத்தியசாலையிலும் கூட மருந்துப் பொருட்களுக்கு பெரும் தட்டுப்பாடு நிலவுகின்றது.

வடக்கு-கிழக்குப்பிரதேசத்தில் இராணுவத்தினரதும் அரசின் ஆதரவு பெற்ற ஆயுதக்கட்சியினரின் அட்டகாசங்கள் காரணமாக மக்கள்பயத்தில் உறைந்துபோயுள்ளனர்:

இதேவேளை இராணுவக் கட்டுப்பாட்டில் இல்லாத வன்னி மற்றும்மட்டக்களப்பு பிரதேசங்கள் மீது அரசு கடந்த பத்து வருடங்களாக மிக இறுக்கமான பொருளாதார தடைகளை விதித்து மக்களைப் பட்டினி போட்டு கொலை செய்கிறது: குழந்தைகள் போஷாக்கு அற்றவர்களாக பாதிக்கப்பட்டுள்ளனர். வைத்தியசாலைகளில் மருந்துக்கு பெரும் தட்டுப்பாடு நிலவுகிறது. இதனால் பெருமளவு நோயாளர்கள் நாளாந்தம் இறந்து கொண்டிருக்கின்றனர். இருந்தபோதிலும் தமிழீழ விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசங்களில் வாழும் மக்கள் வறுமையில் வாடினாலும் மரணபயமின்றி நிம்மதியாக வாழ முடிகிறது: அங்கே எமது கலாசாரம் பேணப்படுகின்றது. மாணவர்களின் கல்வி. வளர்ச்சிக்கும்புலிகளால்அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படுகின்றது இதனை அண்மையில் வெளியான 5ம்ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சைப் பெறுபேறுகள் வெளிப்படுத்தியுள்ளது.

இவ்வாறு அரசினால் மேற்கொள்ளப்படும் அழிவு நடவடிக்கைகளை நிறுத்திதொடரும் போருக்கு சமாதானபேச்சுக்கள் மூலம் நிரந்தர தீர்வு காணப்படவேண்டும் என்ற அக்கறையுடன் தமிழீழ விடுதலைப்புலிகள் கடந்த காலப் பகுதியில் ஐந்து மாத காலம் யுத்த நிறுத்தம் செய்திருந்தனர். அந்த சந்தர்ப்பத்திலும் கூட ஸ்ரீலங்கா அரசு தமிழர் நிலங்களை ஆக்கிரமிப்பதிலும், தமிழர்களை அழித்தொழிப்பதிலும்ஆர்வம்காட்டியதே தவிர நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்துவதற்கான எந்த முயற்சியிலும் ஈடுபடவில்லை.

அதுமட்டுமன்றி இவ் வருடம் ஜனவரி மாதம் யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் ஆகிய நாமும் யாழ். குடாநாட்டில் உள்ள தமிழ் மக்களும் இணைந்து எமது ஆத்ம அபிலாசைகளை வெளிப்படுத்த பொங்கு தமிழ் என்ற நிகழ்வினை நடத்த முயன்றோம். அந்நிகழ்வின் மூலம் அரசு உடனடியாகயுத்தத்தை நிறுத்தி, தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகளான தமிழீழவிடுதலைப்புலிகளுடன் தமிழ் மக்களின் அபிலாசைகளான

★ தனித்தேசிய இனம்.
★ மரபு வழித்தாயகம்.
★ சுயநிர்ணய உரிமை.

என்பன அங்கீகரிக்கப்படக்கூடிய வகையில் பேச்சுக்களை அரசு ஆரம்பிக்க வேண்டும் என கூறி பெரும் எழுச்சி நிகழ்வு ஒன்றினை எவ்வித வன்முறைகளும் இன்றி நடத்த முற்பட்ட போது அம்முயற்சி சந்திரிக்கா அரசினாலும் அதன் ஆதரவுபெற்ற தமிழ் ஆயுதக்குழுக்களினாலும்மிகமோசமான முறையில் அடக்கி குழப்பியடிக்கப்பட்டது.

ஸ்ரீலங்கா அரசு தமிழ்க் கூலிப்படைகளை விலைக்கு வாங்கிக்கொண்டு தமிழர்கள் வாழும் அவர்களது சின்னஞ்சிறிய தாயகப்பிரதேசத்தை சூழ்ந்து நின்று கொண்டு பொருளாதார தடைகளையும் விதித்து மனித உரிமை மீறல்களையும் செய்து கொண்டு தமிழர்களின் ஜனநாயக குரல்களையும்நசுக்கியபடி உலகில் இருந்து பெற்றுக் கொண்ட நவீன ஆயுதங்களாலும் விமானங்களினாலும் தமிழர்கள் மீது ஓர் ஆக்கிரமிப்புயுத்தத்தினை நடத்திக்கொண்டு இருக்கின்றது: இதனை எதிர்த்து இக்கொடுமைகளில் இருந்தும், அரச பயங்கரவாதத்தில் இருந்தும் தமிழ் மக்களை பாதுகாப்பதற்காக அதனை எதிர்த்து தமிழீழ விடுதலைப்புலிகள் போராடுகின்றார்கள். அதன் மூலம் இலங்கையில் நடைபெறுவது ஓர்இனப்பிரச்சினை என்ற உண்மையை சர்வதேச சமூகத்திற்கு அம்பலப்படுத்தியும் உள்ளனர். நிலைமை இவ்வாறு இருக்க மக்களை அழிக்கும் அரச பயங்கரவாதத்தை பற்றி எதுவும் பேசாது மக்களை அழிவில் இருந்து மீட்க முயலும்விடுதலைப்போராட்டத்தை தடை செய்துள்ள உங்களது செயலை எம்மால் புரிந்து கொள்ள முடியவில்லை.

நீங்கள் புலிகளை தடை செய்தமையை நாம் மிகவும் வன்மையாக கண்டிப்பதோடு ஸ்ரீலங்கா அரசினால் அழிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் தமிழ் மக்களின் நன்மை கருதி தாங்கள் இம் முடிவை மீள் பரிசீலனை செய்யவேண்டும் என நியாயத்தின் பெயரால் வேண்டிக்கொள்கிறோம், என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந)

---

# சிங்கள நடன வடிவங்கள் தமிழ்ப் பண்பாட்டோடு ஒத்தவை

## கலைப்பாலம் நிறைவுநாளில் நல்லை ஆதீன முதல்வர்

(யாழ்ப்பாணம்)

''கலை இன்று எம்மை ஒன்றுபடுத்தியுள்ளது. இதன் மூலம் தமிழ்-சிங்களஉறவுகள் பலம்பெற வேண்டும். ஒரே கடவுளின் பிள்ளைகளான நாம் புரிந்துணர்வுடன் அனைவரையும ஏற்றுக் கொள்ளல் அவசியமானது''

கலைப்பாலம் 2001நிறைவு நாள் சிறப்பு நிகழ்வுகள் திருமறைக் கலாமன்ற அரங்கில் கடந்த திங்கட்கிழமை மாலை மன்ற இயக்குநர் பேராசிரியர் நீ. மரியசேவியர் அடிகளார் தலைமையில் நடைபெற்ற போது அங்கு அருளுரை வழங்கிய யாழ் ஆயர் பேரருட்திரு தோமஸ் சவுந்தர நாயகம் ஆண்டகை இவ்வாறு தெரிவித்தார்.

ஆயர் தொடர்ந்து உரையாற்றுகையில்; இந்த நிகழ்வு யாழ்ப்பாணத்தில்நடைபெறுவது மகிழ்ச்சிக் குரியது: கடவுள் எம்மை ஒரே இனமாகப் படைத்து இந்த உலகை ஆளும்படி கொடுத்துள்ளார்: எனவே மனிதர் என்ற முறையில்உறவு, அன்பு, நேயம், சகிப்புத்தன்மை என்பனவற்றோடு புரிந்துணர்வின்பால் அணுக வேண்டும்;

கலையை வெவ்வேறு இனத்தவரும் பல்வேறு விதமாக வெளிக்கொணர்ந்தாலும் இறுதியில் அவற்றை இரசிப்பவன் அவற்றினூடாக இறை தத்துவத்தை உணரவேண்டும்; இனத்தால் மொழியால் வேறுபட்டாலும் தென்பகுதியில்இருந்து யாழ். மண்ணுக்கு வந்து தமது கலைமூலம் எமது மக்களோடு உறவு கொண்டு ஒரே தாய் மக்கள் என்பதை வெளிக்காட்டிய கலைஞர்களைப் பாராட்டுகிறேன்.

தென்னிலங்கை பாரம்பரிய கலையம்சங்களை நேரடியாகப்பார்க்கும வாய்ப்பினை அளித்ததோடு மட்டுமல்லாது வேறுபாடுகளை மறந்துதமிழ் மரபோடு ஒன்றுபட்டு நின்றமை வரவேற்கத் தக்கது என்றார்.

தொடர்ந்து நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் அருளாசி வாழங்குகையில்,

இன்று நாம் பல கேள்விகளுக்கு மத்தியில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். கலை மனிதனை ஒன்று படுத்தியுள்ளது. நோய்களைக் குணமாக்கும் யோகக் கலையின் கூறுகள் சிங்கள நடனவடிவங்களில் மேலோங்கி நிற்பதைப் பார்க்கின்றபொழுது அதுவும் தமிழ்ப் பண்பாட்டோடு கூடிய ஒன்றாகவே காணப்படுகிறது என்றார். (உ-106)

---

## மீளக் குடியமர்வு

# கொடுப்பனவு இன்றுமுதல் வழங்க ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவிலிருந்து இடம் பெயர்ந்து வலிகாமம், வடமராட்சி போன்ற பகுதிகளில் வசிப்போருக்கு புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு கிழக்கு தமிழ் விவகார அமைச்சால் மீளக் குடியமர்வுக் கொடுப்பனவான 3 ஆயிரம் ரூபா வழங்கப்படவுள்ளது.

எனவே தேசிய அடையாள அட்டை, உலர் உணவு பங்கீட்டு அட்டை என்பவற்றுடன் குடும்பத்தலைவர்களை சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

வலிகாமப் பகுதியில் வசிப்போர் யாழ்ப்பாணத்தில் இயங்கும் பளைப் பிரதேச செயலக உப அலுவலகத்திலும், வடமராட்சி வரணி போன்ற பகுதிகளில் வசிப்போர் புலோலியில் இயங்கும் பளைப் பிரதேச செயலகத்திலும் இன்றுமுதல் 24ஆம்திகதி வரை காலை 9.00 மணிக்கு தவறாது சமூகமளித்து தமது பதிவுகளை மேற்கொள்ளுமாறு பிரதேச செயலர் அறிவித்துள்ளார்; (உ)

---

## தேர்தலை ஒட்டி

# அரச ஊழியர்களின் லீவுகள் ரத்து

(கொழும்பு)

அடுத்த மாதம் நடைபெறவுள்ள பொதுத் தேர்தலை ஒட்டி அரசாங்க ஊழியர்களின் விடுமுறைகள் உடனடியாக ரத்துச் செய்யப்பட்டுள்ளன;

நேற்று முன்தினம் முதல் டிசம்பர் மாதம் 10 ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் சகல ஊழியர்களின் விடுமுறைகளையும் ரத்து செய்யுமாறு பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் மற்றும் உள்ளூராட்சி மாகாண சபை அமைச்சின் செயலாளர் எம்.எல். யுனைற் சகல அரச திணைக்கள தலைவர்களுக்கும் பணித்துள்ளார்.

பொதுத் தேர்தலின்போது கடமையாற்றுவதற்கான பயிற்சிகள், செயலமர்வுகள என்பன இந்தக் காலப் பகுதியில் நடைபெறவுள்ளதாலேயே அரச ஊழியர்களுக்கான விடுமுறைகள் ரத்துச் செய்யப்பட்டுள்ளன.

அவர்களது அவசர தேவைகளுக்கானவிடுமுறைதேவைப் படுமாயின் ஊழியர்கள் தமது திணைக்கள தலைவர்களின் முன்னனுமதி பெற்றிருக்க வேண்டுமெனவும் பொது நிர்வாக உள் நாட்டு அலுவல்கள் மற்றும் உள்ளூராட்சி மாகாணசபை அமைச்சின் செயலாளர் அரச திணைக்கள தலைவர்களுக்கு அனுப்பி வைத்த சுற்று நிருபத்தில் குறிப்பிட்டுள்ளார் (உ-4)

---

## ஸ்ரீ. மு. கா. பிரசாரச் செயலர்

# உதுமா லெப்பையின் இல்லம் மீது தாக்குதல்

(மட்டக்களப்பு)

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசின் சிரேஷ்ட துணைத் தலைவரும் கட்சியின் பிரசாரச் செயலாளருமான டாக்டர் உதுமா லெப்பையின் இல்லம் இனம்தெரியாத துப்பாக்கி நபர்களால் தாக்குதலுக்கு உள்ளாக்கப்பட்டதில் நான்கு பேர்காயமடைந்துள்ளனர்.

இச்சம்பவம் கல்முனையில் நேற்று முன்தினம் காலை இடம் பெற்றுள்ளது;

இது பற்றி மேலும் தெரிய வருகையில்;

பொதுஜன ஐக்கியமுன்னணி வேட்பாளருக்குச் சொந்தமான வாகனமொன்றில்வந்தஇத் துப்பாக்கி நபர்களே இத் தாக்குதலை மேற்கொண்டதாகசிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன;

இத்தாக்குதலில் உதுமா லெப்பையின் இல்லம் தாக்கப்பட்டு சேதமாக்கப்பட்டதுடன் அங்கு நின்ற வாகனங்களும் சேதமாக்கப்பட்டன; (உ-4)

## இன்று ஒரு தகவல்

### கடமை தவறாதவன்

முன்னொரு காலத்தில் இங்கிலாந்து நாட்டு அரசர் ஒருவர் வேட்டையாடுவதில் மிகவும் ஈடுபாடு கொண்டவராக விளங்கினார். காட்டைக் காவல் காக்கும் வீரனிடம் 'என்னைத் தவிர யார் வந்தாலும் காட்டில் வேட்டையாட அனுமதி கொடாதே' என்று கட்டளையிட்டார் அரசர். ஒரு சில நாட்களுக்குள் அரசரே வேட்டையாட வில் அம்புகளுடன் குதிரையில் அமர்ந்து புறப்பட்டார். நான்கைந்து வீரர்கள் விலங்குகளைப் பிடிக்கும் வலையுடன் அவரைத் தொடர்ந்து வந்தனர்.

காட்டின் நுழைவாயிலில் இருந்த கதவுகளைத் திறந்து விடுமாறு அங்கே காவலுக்கு நின்றுகொண்டிருந்த இளைஞனிடம் அரசர் சொன்னார். 'என்னை மன்னியுங்கள் என் தந்தையார், யாரையும் வேட்டையாட உள்ளே அனுமதிக்காதே என்று சொல்லிவிட்டுச் சென்றிருக்கிறார்' என்றான் இளைஞன்.

'நான் யார் தெரியுமா? இந்த நாட்டு அரசன், உன் தந்தைக்கே ஊதியம் தருபவன். கதவைத் திறந்து விடு' என்றார் அரசர். அவரைப் பணிவாக வணங்கிய இளைஞன் 'அரசர் பெருமானே! தங்கள் கட்டளையை என் தந்தையார் எப்பொழுதும் மீறமாட்டார். என் தந்தையாரின் கட்டளையை என்னை மீறச் சொல்கிறீர்களே' என்று உறுதியாகப் பேசினான். கடமையில் சிறிதும் வழுவாத அந்த இளைஞனைப் பாராட்டி விட்டு வேட்டையாடாமல் தன் வீரர்களுடன் அரண்மனைக்குத் திரும்பினார் அரசர்.

பேராசிரியர் எ. சோதி.

## புலிகளுடனான யுத்தம் முடிந்ததும்
# படையினர் ஐ.நா. அமைதிப்படையில் சேர்க்கப்படுவர் - ஜனாதிபதி உறுதி

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுடனான யுத்தம் முடிவடைந்த பின்னர் இலங்கைப் படையினரை ஐக்கிய நாடுகள் சபையின் அமைதிப்படையில் இணைக்க தான் முயற்சி செய்து வருவதாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் இலங்கைப் படையினர் தபால்மூலம் வாக்களித்தனர். இந்நிலையில் அவர்களது வாக்கை கவர்ந்து கொள்ளும் வகையிலேயே ஜனாதிபதி படையினரை மகிழ்வித்து மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் விடுதலைப் புலிகளுடனான போர் முடிந்தவுடன் நாட்டில் யுத்த அவலம் நீங்கி விடும் இந்நிலையில் நாட்டுக்காக உழைத்த பாதுகாப்பு படையினரை நாம் வெறும் கையோடு வீட்டுக்கு அனுப்பப் போவதில்லை ஐக்கிய நாடுகள் அமைதிப் படையில் அவர்களை இணைக் ஏற்பாடுகள் செய்யப்படுவதால் பாதுகாப்பு படையினர் தமது பதவிகளை இழக்கமாட்டார்களென்றும் ஜனாதிபதி சந்திரிகா நம்பிக்கை வெளியிட்டுள்ளார். (இ)

## மீனவர்கள் வீடு திரும்பினர்

(யாழ்ப்பாணம்)

கடந்த 17ஆம் திகதி யாழ். குடாக் கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்த வேளை காணாமற் போனதாகக் கருதப்பட்ட நான்கு மீனவர்களும் வீடு திரும்பிவிட்டதாகவும், இவர்கள் மீதான விசாரணைகளை யாழ் பொலிஸார் மேற்கொண்டு வருவதாகவும் ஊடகத்தகவல் மையம் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

## கோப்பாயில்
# சிறைச்சாலை அமைக்கும் முயற்சி கைவிடப்பட்டது

(யாழ்ப்பாணம்)

கோப்பாய்ப்பகுதியில் சிறைச்சாலை அமைக்கும் திட்டம் கைவிடப்பட்டுள்ளதாக யாழ். சிறைச்சாலை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

சிறைச்சாலை அமைப்பதில் ஏற்பட்டுள்ள பாதுகாப்பு நெருக்கடி காரணமாக இத்திட்டம் கைவிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (உ-4)

## சின்னமரு றோ.க.பாடசாலை
# 10 வருடங்களின் பின் வரும் ஜனவரி முதல் இயங்கும்

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறைக் கல்விக் கோட்டத்தின் கீழ் உள்ள யா/சரவணை சின்னமடு றோமன் கத்தோலிக்கப் பாடசாலை மீண்டும் இயங்கவுள்ளது.

10 வருடங்களின் பின் மீண்டும் இப்பாடசாலை எதிர்வரும் ஆண்டு ஜனவரி மாதம் முதல் இயங்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

சேதமடைந்த நிலையில் இருந்த இப்பாடசாலை ஒரு இலட்சத்து 25 ஆயிரம் ரூபா செலவில் தற்பொழுது புனரமைக்கப்பட்டுள்ளது.

இக்கிராமச் சிறுவர்கள் தற்பொழுது ஒரு மைல் தூரம் நடந்து சென்றே கல்வி கற்று வருகின்றார்கள் என சின்னமடுக் கிராம பெற்றோர்கள் தெரிவித்தனர். (உ-75)

## முன்பள்ளி ஆசிரியர்களுக்கு கொடுப்பனவு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் யாழ்ப்பாணம் ஆகிய பிரதேச செயலகங்களுக்கு உட்பட்ட முன்பள்ளி ஆசிரியர்களுக்கான செப்டெம்பர் ஒக்டோபர் மாதங்களுக்கான ஊக்குவிப்புக் கொடுப்பனவு இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நல்லூர் பிரதேச சபையின் கொக்குவில் நூலக கேட்போர் கூடத்தில் வைத்து வழங்கப்படுமென்று நல்லூர் பிரதேச சபைத்தலைவர் க. மணிவல்லவராஜன் தெரிவித்துள்ளார்.

கொடுப்பனவை பெற்றுக் கொள்ள அனைத்து முன்பள்ளி ஆசிரியர்களும் சமுகம் தரவேண்டுமென்றும் கேட்கப்பட்டுள்ளது. (இ)

## கடற்படை முகாமருகே
# குண்டு வெடிப்பு பொலிஸார் ஒருவர் பலி

(கொழும்பு)

மதவாச்சி பூனாவில் பகுதியில் அமைந்துள்ள கடற்படை முகாமிற்கு அருகே நேற்றுமுன்தினம் காலை இடம்பெற்ற குண்டுவெடிப்புச்சம்பவத்தில் பொலிஸார் ஒருவர் பலியாகியுள்ளார்.

இச்சம்பவத்தில் காயமடைந்த பொலிஸார் இருவர் அனுராதபுரம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. இச்சம்பவம் தொடர்பாக வவுனியா பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (உ-5)

## காவலூர்- புங்குடுதீவு இடையே
# பேருந்து சேவை நடத்துமாறு கோரிக்கை

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறைக்கும் புங்குடுதீவுக்கும் இடையில் பேருந்து சேவையினை நடத்த வேண்டும் என்று புங்குடுதீவு மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

புங்குடுதீவில் உரியவாறு வைத்திய சேவைகள் இடம்பெறாமையினால் ஊர்காவற்றுறை மாவட்ட வைத்தியசாலைக்கு புங்குடுதீவு மக்கள் அடிக்கடி செல்ல வேண்டிய தேவை இருப்பதாகவும்,

எனினும் போக்குவரத்துச் சேவைகள் இன்மையால் மக்கள் பெரிதும் துன்புறுவதாகவும் மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (உ-75)

## சட்டவிரோதமாக கசிப்பு
# உற்பத்தி செய்த 13 பேரிடம் தண்டப்பணம் அறவீடு

(யாழ்ப்பாணம்)

சட்டவிரோதமான முறையில் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட 13 பேரிடம் இருந்து யாழ். நீதிமன்றினால் மொத்தமாக 75 ஆயிரம் ரூபா தண்டப்பணமாகவும் 14 ஆயிரம் ரூபா தர்மப்பணமாகவும் அறவிடப்பட்டது.

யாழ். மாவட்ட நீதிபதி இ.த விக்னராசா முன்னிலையில் கசிப்பு உற்பத்தி தொடர்பான வழக்கு நேற்று முன்தினம் இடம்பெற்ற போது சம்பந்தப்பட்டவர்கள் குற்றத்தினை ஒப்புக்கொண்ட நிலையில் மேற்படி தண்டப்பணமும், தர்மப்பணமும் செலுத்துமாறு நீதிபதி தீர்ப்பளித்தார்.

ச. அமலதாசன், அடம்பன் வீதி யாழ்ப்பாணம், இ. சிவபாலன், முனீஸ்வரா வீதி யாழ்ப்பாணம், ஜோ. தவம், மீனாட்சி அம்மன் வீதி யாழ்ப்பாணம், ஜே. ஈஸ்வரி, வெள்ளாந்தெரு யாழ்ப்பாணம், இ. செல்வரத்தினம். காரைக்கட்டு லேன் வண்ணார் பண்ணை, பா. கணேஸ், வளாக வீதி யாழ்ப்பாணம், இ. பூரணலட்சுமி, பாரதி புலம் திருநெல்வேலி, நி. புஸ்பலதா, முருகன் வீதி திருநகர், சி. பரமநாதன், 215/4 இராசாவின் தோட்டம் யாழ்ப்பாணம், சி. கலா, அன்னங்கை உரும்பிராய், ச. புஸ்பம் அன்னங்கை உரும்பிராய், ம. சுப்பிரமணியம், ஐந்து வேம்படி, தாவடி, அ. மதுவதாஸ், டேவிற் வீதி யாழ்ப்பாணம், ஆகியவர்களே மேற்படி தீர்ப்புக்கு ஆளானவர்களாவர். (உ-10)

## உடன் தொடர்பு கொள்க

(யாழ்ப்பாணம்)

கீழே பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளவர்களை யாழ். சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்துடன் மிகவும் அவசரமாக தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இளையதம்பி சிவானந்தம் பொது நூலகம் நகர சபை, சாவகச்சேரி.

மூர்த்தி குமாரசாமி 5ஆம் ஒழுங்கை, உடுவில் சுன்னாகம்.

ஆறுமுகம் தங்கராஜா சுதுமலை தெற்கு மானிப்பாய்.

றொபேட் கென்னடி சவிரிமுத்து யாழ்ப்பாணம்.

சின்னத்தம்பி லோகநாதன் (லொறிச் சாரதி) லோகநாதன் சுகந்தன், லோகநாதன் கிரிஜா, கண்டி வீதி (டிறிபேர்க் கல்லூரி அருகில்) சாவகச்சேரி.

சண்முகசுந்தரம் சிவயாதம் உசன், மிருசுவில். (உ)

## குளம் புனரமைப்பு

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட சுருவில் பகுதியில் உள்ள சுருவில் குளவாய்க்கால் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளது.

இக்குளவாய்க்கால் புனரமைப்பதற்குரிய நிதியான ஒருலட்சம் ரூபாவினை விவசாயத் திணைக்களம் வழங்கியிருந்தமையும்,

மேற்படி புனரமைப்பு வேலையினை சுருவில் விவசாயிகள் சம்மேளனம் மேற்கொண்டமையும் குறிப்பிடத்தக்கது. (உ-75)

## கைகலப்பில்
# சமரசம் செய்தவர் கத்திக்குத்திற்கு இலக்கு

(மந்திகை)

இருவரிடையே ஏற்பட்ட வாய்த்தகராறு கைகலப்பாக மாறியதில் சமரச முயற்சியில் ஈடுபட்ட நபர் கத்திக்குத்திற்கு இலக்காகிய சம்பவம் கடந்த சனிக்கிழமை உடுப்பிட்டி கெருடாவில் பகுதியில் நடைபெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் இதே இடத்தைச்சேர்ந்த சின்னப்பு மனோகரராசா (வயது-28) என்பவரே கத்திக்குத்திற்கு இலக்காகி பருத்தித்துறை அரசினர் ஆதாரவைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளார். (செ-23)

## சம்பள ஆணைக்குழுவின்
# சிபார்சுகளுக்கு மேலதிகமாக அரச ஊழியர்களுக்கு சலுகைகள்
## விரைவில் வழங்க நடவடிக்கை

(கொழும்பு)

அரசாங்க ஊழியர்களுக்கு மேலதிகமாக பல சலுகைகள் வழங்கப்படவுள்ளன. சம்பள ஆணைக்குழுவின் சிபார்சுகளுக்கு மேலதிகமாகவே இச்சலுகைகள் வழங்கப்படவுள்ளன.

இதனை அரசாங்க சேவைகள் தொழிற்சங்க சம்மேளனத் தலைவர் தெரிவித்துள்ளார்.

அடுத்தவாரம் ஜனாதிபதியிடம் கையளிக்கப்படவுள்ள 'திஸதேவேந்திர' சம்பள ஆணைக்குழுவின் சிபார்சு செய்யப்பட்டுள்ள அதிகரிப்புகளுக்கு மேலதிகமாக இந்தச் சலுகைகள் வழங்கப்பட்டுள்ளன என இவர் மேலும் தெரிவித்துள்ளார்.

அரச ஊழியர்களின் வாழ்க்கைச் செலவுச்சுட்டெண்ணிற்கான கொடுப்பனவு, வருடாந்தம் எஞ்சுகின்ற மேலதிக கொடுப்பனவு, பெண்களுக்கான பிரசவ லீவுகள் என்பனவற்றிற்கே இம்மேலதிக சலுகைகள் வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (செ)

## சிந்தனைக்கு விருந்து

### இறைவா! சொல்

சோகச் சுமையைச் சுமந்துநெடு மூச்செறியும்
ஓகையிலா நாள்கள் ஒழியாவோ? - போகமிக்க
நற்பற்கரிய அந்த நாள்களினி மீளாவோ?
எம்மிறையே! சொல்வாய் எமக்கு.

ஓகை இலா - உவகை இல்லாத.

'பலழயவன்'

# ஆப்கானில் இடைக்கால அரசமைப்பு தொடர்பான கூட்டம் திங்களன்று

(நியூஜோர்க்)

ஆப்கானிஸ்தானில் இடைக் கால நிர்வாக அரசு அமைக் கும் கூட்டம் ஒன்றை ஐ; நா: சபை கூட்டவுள்ளது.

இக்கூட்டம், திங்கட்கிழமை ஜேர்மனியின் தலைநகர் பேர் லினில் நடத்துவதற்குரிய ஏற் பாடுகளை ஐ. நா: பிரதிநிதி கள் செய்து வருகின்றனர்.

இக்கூட்டத்தின்படி முதலில் பெரிய தொரு தாற்காலிக கவுன்சில் அமைக்கப்படுமென் றும் அந்த கவுன்ஸிலே இடைக்கால நிர்வாகத்தைத் தெரிவுசெய்ய வேண்டும் என்றும்உத்தேசிக்கப்பட்டிருக் கிறது.

இந்தபேச்சுவார்த்தைகள் காபூலில் நடைபெறவேண்டு மென்று வடக்குக் கூட்டணி தெரிவித்துள்ளது:

ஆனால், பேர்லினில் கூட் டம் முடிந்த பின் காபூலுக்கு வருவதாக ஐ. நா. அதிகாரி கள் கூறுகிறார்கள்;

அமெரிக்காவும் ஐ. நாவும் நெருக்கடிகள் கொடுத்ததை அடுத்து வடக்கு கூட்டணியும் மற்றும் குழுக்களும் பேச்சு வார்த்தைக்கு இணங்கியுள் ளனர். (து)

## கிரிக்கெட் விதிகளை மீறியதாக இந்திய அணியைச்சேர்ந்த அறுவர் மீது குற்றச்சாட்டு

(டர்பன்)

தென்னாபிரிக்காவில் நடை பெற்றுவரும் கிரிக்கெட் டெஸ்ட் போட்டியில் இந்திய அணி வீரர்கள் ஆறு பேர் சர் வதேச கிரிக்கெட் விதிகளை மீறியதாக ஆட்ட நடுவரான இங்கிலாந்தின் மைக் டென் னிஸ் அவர்களால் குற்றம் சாட்டப்பட்டுள்ளனர்:

தென்னாபிரிக்காவிற்கு எதி ரான இரண்டாவது டெஸ்ட் போட்டியின் போதே இவ் ஆறு வீரர்களும் முறையற்ற வகையில் நடந்து கொண்ட தாக குற்றம் சாட்டப்பட் டுள்ளது.

சச்சின்டெண்டுல்கர் பந்தை சேதப்படுத்தியதற்காகவும், விரேந்தர் செவாக் கார்பஜன் சிங், எஸ். எஸ் தாஸ். தீப் குப்தா ஆகியோர் அதிக அப்பீல்கள் கேட்டமைக்காக வும் ஒரு டெஸ்ட் போட்டியில் விளையாடத் தடையும் சம்ப ளத்தில் 75 வீத தண்டமாக வும் விதிக்கப்பட்டுள்ளது.

அணித்தலைவர் சௌரவ் கங்குலி மீது வீரர்களை கட் டுப்பாட்டில் வைத்திருக்க தவறியமை மற்றும் பிற குற் றங்களுக்காக ஒரு டெஸ்ட் போட்டி மற்றும் இரண்டு ஒரு நாள் போட்டியிலும் விளையாட தடையும் சம்ப ளத்தில் 75 வீத தண்டமாக வும் வழங்கப்பட்டுள்ளது.

இத் தண்டனைகள் தொடர்பாக இந்திய கிரிக் கெட் கட்டுப்பாட்டுச் சபை தனது அதிருப்தியை வெளி யிட்டுள்ளது. (உ-2)

## ஜோர்ச் பெர்னாண்டஸ்ஸின் மீள் நியமனத்திற்கு சோனியா எதிர்ப்பு

(புதுடில்லி)

பாதுகாப்புமந்திரியாகஜோர்ச் பெர்னாண்டஸ்நியமிக்கப்பட் டதையும் பொடோ சட்டம் கொண்டு வரும் முயற்சியை யும் எதிர்க்கும்படி சோனியா காந்தி கோரிக்கை விடுத்துள் ளார்.

நேற்று முன்தினம்புதுடில்லி யில் கூடிய காங்கிரஸ் மத்திய குழுக் கூட்டத்தில்மேற்கண்ட கோரிக்கையை விடுத்தார்:

இதேவேளை, டோஹாவில் நடைபெற்ற உலக வர்த்தக மாநாட்டில் இந்தியா நடந்து கொண்ட விதம் பற்றியும் சோனியா காந்தி விமர்சித் தார். [து]

## பின்லேடனின் இயங்குதளம் காஷ்மீருக்கு மாறும்?

(புதுடில்லி)

ஆப்கானைத் தளமாகக் கொண்டு இயங்கிவந்த ஒஸாமா பின்லேடனும் அவ ரது அல்கெய்டா அமைப்பும் காஷ்மீருக்குள் நுழைவதற் கான சாத்தியக்கூறுகள் தென் படுவதாக இந்திய இராணுவ அதிகாரியான லெப்டினன் ஜெனரல் ஜெயாமுகர்ஜி அச் சம் தெரிவித்துள்ளார்.

ஆப்கானிஸ்தானில் அவர் களின் இராணுவபலம் முடக் கப்பட்டு வருவதைஅடுத்து அவர்கள் காஷ்மீருக்குள் நுழைந்து ஏனைய தீவிரவாத அமைப்புக்களுடன் இணைந்து பல்வேறு நாடுகளுக்கு எதிரா கப்போரிடலாமெனவும் அவர் அச்சம் வெளியிட்டுள்ளார். (உ-5)

## பாகிஸ்தானில் இருந்த தலிபான் தூதரகங்கள் மூடப்படுவதாக அறிவிப்பு

(இஸ்லாமபாத்)

பாகிஸ்தானிலுள்ள தலி பான்களின் தூதரகங்கள் இரண்டும் மூடப்படுவதாக அந் நாட்டின் வெளியுறவு அமைச்சர் அப்துல் சதார் நேற்று முன்தினம் அறிவித் துள்ளார்.

விஸாகர் மற்றும் கெட்டா நகர்களில் அமைந்திருந்த அவர்களின் தூதுவராலயங் களே மூடப்படுவதாக அறி விக்கப்பட்டுள்ளது:

ஆப்கானில் தலிபான் களைத் தவிர்த்த புதிய அரசு ஒன்று அமைய இருப்ப தாலேயே தலிபான்களின் தூதரகம் மூடப்படுவதாக நம்பப்படுகிறது.

தூதரகம் மூடப்படுவது தொடர்பாக தலிபான் தூத ருக்கு ஏற்கனவே அறிவிக்கப் பட்டுள்ளதாகவும் ஆனாலும் அவர்களுடனான ராஜீக தொடர்புகளை இன்னும் துண்டிக்கவில்லையென்றும் அவர் மேலும் தெரிவித்துள் ளார். (5)

## தலிபான் கட்டுப்பாட்டில் இருந்த அந்திரெக்ஸ் ஆய்வுகூடம் ஆப்கானில் கண்டுபிடிப்பு

(காபூல்)

ஆப்கானிஸ்தானில்தலிபான் களின் கட்டுபாட்டில் இயங்கி வந்த 'அந்திரெக்ஸ்' ஆய்வு கூடமொன்று கண்டுபிடிக்கப் பட்டுள்ளதாகத் தெரிவிக்கப் படுகிறது.

காபூல் நகரில் மறைவிட மொன்றில் இயங்கிவந்த இந்தஆய்வு கூடமேதற்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக பிரிட்டிஷ் செய்தித்தாள் ஒன்று தகவல் வெளியிட்டுள் ளது.

இந்த ஆய்வுகூடத்தில் உற் பத்தி செய்யப்பட்ட அந்தி ரெக்ஸ் கிருமிகளே அமெ ரிக்கா உட்பட பல்வேறு நாடு களின் தூதுவராலயங்களுக் கும் மற்றும் தனிப்பட்டநபர் களுக்கும் அனுப்பி வைக்கப் பட்டு வந்ததாக நம்பப்படுப் றது. (உ-5)

## விடுதலையின் ஒலி

(யாழ்ப்பாணம்)

சென்.ஜேம்ஸ் ஆலயவாலிபர் சங்கத்தினரால் நடத்தப்படும் 'விடுதலையின் ஒலி' கலை நிகழ்வுகள் ஆறு ஆண்டுகளின் பின் கடந்த 4 ஆம் திகதிமுதல் சுண்டுக்குளி மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்று வருகின்றன. (உ-106)

## விபச்சாரத்தில் ஈடுபட சட்டபூர்வ அனுமதி

(இலண்டன,)

கிழக்கு ஐரோப்பா மற்றும் மத்திய ஐரோப்பிய நாடுகளி லிருந்து ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுக்கு வரும பெண்கள் அங்கு விபச்சாரத்தில் ஈடுபட உரிமை உண்டு என ஐரோப் பிய நீதி மன்றம் ஒன்று தீர்ப் பளித்துள்ளது.

போலந்து மற்றும் செக்குடி யரசைச் சேர்ந்த 6 பெண் கள் தாம் நெதர்லாந்தில் விபச்சாரத்தில்ஈடுபட உரிமை மறுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்து வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்திருந்தனர்.

இந்த வழக்கை விசாரணை செய்த நீதிமன்றம் மேற்படி தீர்ப்பை வழங்கியுள்ளது.

சுயமாக விபச்சாரத்தில் ஈடுபடுவது ஒரு தொழில் என் றும் ஐரோப்பிய ஒன்றியத்தில் இணைந்துள்ள நாடுகளில் இருந்து வருபவர்கள் பிற உறுபபு நாடுகளில் இத் தொழிலில் ஈடுபடும் உரி மையை ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுக்கிடையிலான ஒப் பந்தம் வகை செய்வதாக இவர்கள் வாதிட்டார்கள்.

இவர்களின் வாதத்தை ஏற் றுக் கொண்ட நீதிமன்றம், ஆனால் விபச்சாரம் செய்யப் போகிறேன் என்று மட்டும் கூறிக்கொண்டு பெண்கள் ஐரோப்பிய ஒன்றிய நாடுக ளுக்குள் நுழைய முடியா தென்று நீதிமன்றம் தீர்ப் பளித்துள்ளது. (உ-5)

## தென்னாபிரிக்க, இந்திய கிரிக்கெட் டெஸ்ட் போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவு

(டர்பன்)

தென்னாபிரிக்க அணிக்கும் இந்திய அணிக்கும்இடையே போட் எலிசபெத்தில் நடை பெற்ற இரண்டாவது கிரிக் கெட் டெஸ்ட் போட்டி வெற்றி தோல்வி இன்றி முடி வடைந்துள்ளது.

முதல் இன்னிங்ஸ் இல் துடுப் பெடுத்தாடிய தென்னாபி ரிக்க அணி 362 ஓட்டங்க ளுக்கு சகல விக்கெட்டுக்களை யும் இழந்தது. தென்னா பிரிக்கஅணி சார்பாக கிப்ஸ் 196 ஓட்டங்களையும் மார்க் பவுச்சர் ஆட்டமிழக்காது 68 ஓட்டங்களையும் பெற்றனர்.

இந்திய அணிசார்பானபந்து வீச்சில் ஸ்ரீநாத் 76 ஓட்டங் கள்கொடுத்து 6 விக்கெட்டுக் களை வீழ்த்தினார். பதிலிற்கு துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 201 ஓட்டங்களைப் பெற்றது. லக்ஸ்மன் 81 ஓட் டங்களைப் பெற்றார். தென் னாபிரிக்க அணி சார்பான பந்துவீச்சில் ஷோன் பொலக் ஐந்து விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

இரண்டாவது இன்னிங்ஸ் இல் தென்னாபிரிக்க அணி ஐந்து விக்கெட் இழப்பிற்கு 233 ஓட்டங்களை பெற்ற வேளை தனது ஆட்டத்தை நிறுத்திக்கொண்டதாக அறி வித்தது.

பதிலிற்குஇந்தியஅணிதுடுப் பெடுத்து ஆடிக்கொண்டிருக் கும்போது தொடர்ந்துமழை இடையூறு ஏற்பட்டது. எனி னும் இநதியஅணி 3 விக்கெட் இழப்பிற்கு 206 ஓட்டங்களை பெற்றவேளை மழை மீண்டும் பெய்தது. இதனால் போட்டி தொடர்ந்தும் நடத்த முடி யாமல் ஆட்டம் வெற்றி தோல்வி இன்றி முடிவடைந் ததாக அறிவிக்கப்பட்டது.

இரு அணிகளுக்குமிடை யான மூன்றாவது டெஸ்ட் போட்டி வரும் வெள்ளிக் கிழமை இடம்பெறும். (உ-02)

## படிப்பினைகளை

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

இன்றுதமிழ் மக்கள் மீதான கெடுபிடிகள், பாலியல் வல் லுறவுகள், கைதுகள், காணா மல் போதல் என்பன தொடர்ந்த வண்ணம் உள் ளன.

ஆனால் இவை ஒன்றும் இங்கு நடைபெறவில்லை என்பது போல இத்திய சக் திகள் வெளியுலகிற்கு ஒரு தோற்றப்பாடடை உருவாககி வருகின்றன.

தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை வலியுறுத்தி செய் யப்பட்ட பொங்கு தமிழை அடக்கி மக்களின் உணர்வு களை சிதறடிகக முற்பட் டது மட்டுமல்லாமல் அதனை முன்னின்று செய்தவர்களுக்கு எதிராக இராணுவ கெடுபிடி களை கட்டவிழ்த்தும் விட் டார்கள்.

எனவே தமிழ் மக்களாகிய நீங்கள் இத்தேர்தலில், தமிழ ரின் சுயநிர்ணய உரிமையை எதிர்ப்பவர்கள், புலிகள் மீதான தடைகளை நீக்கமுடி யாத வாறு வழிசமைப்பவர் களை இலங்கண்டு நிராகரிப் பதுடன் தமிழ்மக்கள் திறந்த வெளிச்சிறையில் வாழ்கிறார் கள் என்பதை வலியுறுத்தவும் அடக்கு முறைகளை வெளிக் கொணரவும் ஓரணியில் நின்று தமிழர் மானம் காப் பீர்களாக என்று குறிப்பிடப் பட்டுள்ளது. (உ)


# பொதுத் தேர்தல்-2001



தமிழினம் தலை நிமிர்ந்து நின்றிட
எங்கள் கூட்டுறவாளன்
திரு. சி. சிவமகாராசா
அவர்களுக்கே எம் வாக்கு



தமிழர் விடுதலைக் கூட்டணி

(ஹி-2898)

அல்லற்பட்டு ஆற்றாது அழுத கண்ணீரன்றே செல்வத்தைத் தேய்க்கும் படை

குறள்

==================

# வலம்புரி

==================

## உலகப் பயங்கரவாதம்

இனயுத்தத்தில் ஸ்ரீலங்காப் படையினரின் ஷெல் தாக்குதலால் கொல்லப்பட்ட- அங்கவீனமடைந்தவர்களின் எண்ணிக்கை யுத்தத்தில் கொல்லப்பட்டவர்களின் தொகையில் பெரும் பங்கை கொண்டுள்ளது.

பொது மக்களின் குடியிருப்புககளை நோக்கி ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்படும்போது அது விடுதலைப் புலிகளின் இலக்குகளையே தாக்கும் என கருதுவதும், ஏவப்பட்ட ஷெல புலிகளின் இலக்குகளைத் தாக்கியதாக அறிக்கை விடுவதும், இனயுததத்தை நீடிக்கச் செய்யுமே தவிர அதற்கு முடிவுகட்டாதென்பதை உணர்ந்து கொள்வது அவசியமாகும்.

மககள் பரந்து வாழும் குடிமனைகள் மீது துடீமரன ஷெல் தாக்குதலகளை ஒரு நாட்டின் அரசியல் எலலைலக்குள் மேற்கொள்வதுஇனவாதத்தின முற்றிய நிலையாகும். இரவு-நடுச்சாமத்தில் குடிமனைகள் மீது நடத்தபபடும் ஷெல தாக்குதலகளால் குழந்தைகள் முதல் முதியவா வரை உடல் சிதறிப்போகின்றாரெனில, அவர்களின் வீடு உடைவுறுகிறதெனில இதனை விட உலகப் பயங்கரவாதம் வேறொன்றும் இருக்க முடியாது.

சிறுவர் உரிமை சிறுவர் பாதுகாப்பு என்றெலலாம் ஐ.நா.சபையில முழக்கமிடும் வெளிவ்வகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமருக்கு- படையினரின் ஷெல தாககுதலில் படுககையில் இருந்த பாலகர்களின் உயிர்பறிக்கப்பட்ட சம்பவங்கள்ஞாபகத்திற்கு வராமல் போனது வசித்திரமே.

நேற்று முன்தினம் ஏறாவூர்ப் பிரதேசத்தில் படைத்தரப்பில இருநது ஏவப்பட்ட ஷெல குடிமனைக்குள் வீழ்ந்து வெடித்ததில் கணவன் மனைவி உட்பட ஒரே குடும்பத்தைச் சோந்த நாலவர் துடிதுடித்துப் பலியாகிப் போயினர். விடுதலைப் புலிகளின் இலக்கை நோககி தாக்குதல நடத்தபபட்டதாக உலகிற்குக காட்டிக் கொண்டு அப்பாவிப் பொதுமக்களைக் கொன்றொழிககும் நடவடிக்கை ஆயுதப் போராட்டத்தின் வேகத்தை மேலும் தூண்டுவதாகவும், சிங்கள அரசுகள் மீது தமிழ் மக்கள் தீராத பகைமையை வளர்ப்பதாகவும் அமையும்.

# இடமாற்றம் செய்யப்பட்ட ஆசிரியர்கள் பெயர் விபரம்

(யாழ்ப்பாணம்)

மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் அலுவலகத்தில் கடந்த 19 ஆம் திகதி கூட்டப்பட்ட இடமாற்றச் சபையில், வலயக் கல்விப் பணிப்பாளர்களால் சமர்ப்பிக்கப்பட்ட விடுவித்தல், கடிதத்திற்கமைவாக இடமாற்றம் செய்யப்பட்டவர்களின் பெயர்கள் வலய ரீதியாக வருமாறு.

**யாழ்ப்பாண வலயத்திற்கு இடமாற்றம் பெறுவோர்:**

திருமதி.பா. மகேந்திரன் (மட்டுவில் தெற்கு அ மி த. க பா), செல்வி. வ. இந்துமதி (சந்திரபுரஸ்கந்தவரோதயாம. வி.), ஞா. சிவேந்திரராசா (மறவன் புலோ சகலகலா வல்லி. வித்), திருமதி ச. சிவகுமாரசர்மா (கைதடி குருசாமி வித்), திருமதிவி ஜெயபாலச்சந்திரன் (கைதடி குருசாமி வித்), திருமதி சு.கோகுலதாசன் (சாவ. மகளிர் கல்லூரி), செல்வி.ப பாலசுப்பிரமணியம் (நாவற்குழி மகா வித்), திருமதி ம.ஞானசேகர் (குடத்தனை அரசினர் த. க பா.), த குமாரதாசன் (பொலிகண்டிஇ.த.க.பா.), க கௌரிகாசன் (அல்வாய். ஸ்ரீலங்கா வித்), க கதிர்காமநாதர் (சுதுமலை அ த.க. பா), திருமதி தி ரவீந்திரன் (மானிப்பாய் சென்ற் ஆன்ஸ். றோ.க.த.க.பா), திருமதி சி ஸ்ரீதரன் (இராமநாதன் கல்லூரி), திருமதி சி நந்தகுமார் (அல்லைப்பிட்டி பராசக்தி வித்தி) த. பரமேஸ்வரன் (சேர் வைத்திலிங்கம் துரைசாமி வித்தி), திருமதி யோ. விநாயகமூர்த்தி (புங்குடுதீவு ம..வி), திருமதி த. தர்மரத்தினம் (நெடுந்தீவு ம.வி.), க உருத்திரகுமாரன் (நயினாதீவு ம வி), திருமதி செ. உமாகரன் (நயினாதீவு, நாகபூசணி வித்தி.), ஐ நடராஜா (யாழ்ரன் கல்லூரி)

**வலிகாமம் வலயத்திற்கு இடமாற்றம் பெறுவோர்:**

ஆ.நடராஜா (உசன்இராமநாதன்கல்லூரி) செல்வி அருந்ததி (மட்டுவில் கமலாசனி. வித்) மு.செல்வச்சந்திரன் (தொண்டைமானாறு வீரகத்திப் பிள்ளையார் ம வி.).ஆ பிரபாகரன் (தேவரையாளி இந்துக் கல்லூரி) பூ அலன் பூபாலசிங்கம் (தேவரையாளி இந்து க்கல்லூரி) ஏ.எம் ஈ அலெக்ஸ் நிசாபதி (கொழும்புத்துறைசென் ஜோசப்வித்தி) திருமதி க. மகாலிங்கசிவம் (பெரியபுலம் ம வி), திருமதி. பா.தவக்குமார் (ஆவரங்கால் நடராஜா இராமலிங்க வித்) செல்வி ப. செல்வலயா (ஊரெழு கணேசா வித்)

**வடமராட்சி வலயத்திற்கு இடமாற்றம் பெறுவோர்:**

திருமதிஅ. பரலோகராசா (மிருசுவில் அ த.க.பா.) செல்வி ர.நமசிவாயம் (மந்துவில் ஸ்ரீபாரதிவித்) இ நித்தியகுமார் (சுதுமலை சிந்மய பாரதிவித்.), திருமதி வி சிவகடாச்சம் (தாவடி இ.த.க. பா), செல்வி ஆ றோசினி (விக்ரோறியா கல்), திருமதி ம.தியாகராஜா (கோப்பாய் நாவலர் வித), செல்வி சி. தேவகுமாரி (ஆவரங்கால் நடராஜா இராமலிங்க வித்தி.), திருமதி ஸ்ரீசத்திராசா உரும்பிராய் சந்திரோதய வித்தி.)

**தென்மராட்சி வலயத்திற்கு இடமாற்றம் பெறுவோர்:**

திருமதி. ஆ விமலேந்திரன் (குடத்தனை கரையூர் அ மி த.க) (உ-7,19 ,9)

## யாழ். பல்கலைக்கழக உடற்கல்வி டிப்ளோமா கற்கை நெறிக்கு; 50 பேர் தெரிவாகினர்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக உடற்கல்வி டிப்ளோமா கற்கைநெறி 2001/2002இற்கு மாணவர்களைத் தெரிவு செய்வதற்காக அண்மையில் இடம் பெற்ற நேர்முகத்தேர்வின் பிரகாரம் தெரிவு செய்யப்பட்ட 50 பேரின் பெயர்கள் வெளியாகியுள்ளன. அதன் விபரம் வருமாறு.

கு. அனுஷன், சோ. அருள்தீபன், அ. பெனெட் குறேஸ், சி. ஜெனகன் ரா. ஜெயக்குமார் வை. லோகேஸ்வரன், கு. மதியழகன், மு. நவதீபன், சு. நிருபன், த. பரமேஸ்வரன், இ ரமேஸ், பொ. சகிலன், அ. தம்பிராஜ் த. தர்மேந்திரா, ஜே அனுஸ்ரதாஸ், செ. சாளஸ்அன்பதாஸ், தெ. எழில்ரஞ்ஜன், து. கரிகரன், சு.இந்திரதாஸ், அ. ஜெபந்தன், ஜெ ஜெயகாந்த் இ. கஜமுகன், ச.கண்ணதாசன், க. குகனேசன், செ. குமரேசன், ச. மணிமாறன், செல்வி ம.மெடொனா, நா. நாகராஜ், அ. நிஷாந்தன், ம. பிரணவரூபன், பெ. ராஜமனோகரன், ஜ றியோல்ட், செல்வி.பு. ரோகினி, சி. சசிகரன், செ. செந்தில்குமரன், யோ. சி. சிவகுமார், சி. சிவசெல்வன், ர. சிறிரமணன், செல்வி ஜெ. சிறிவித்தியா, வை. சுபராஜ் வ. சுகந்ததீபன், க. சுரேந்திரன், தி. தவகுணராஜ், கு. திலிப்கரன், சொ. தேவலிங்கம், ந. தினேஸ், சி. திருத்தணிகன், க. துஷ்யந்தன், சோ. விபுலன், த. விசாகன், (உ-2)

## சாயி அருளமுதம்



மானுட வாழ்வு என்னும் நதி பலபள்ளத்தாக்குகளில் வீழ்ந்து, பல மலைச் சிகரங்களின் மீது ஏறி, எத்தனையோ புதர்களில் மறைந்து, தெய்வீக அருள் என்னும சமுத்திரத்தில்பாய்வதை நாடிச்செல்லுகிறது. ஆனால் நடப்பமதன்ன? பருக முடியாத உப்புச்சமுத்திரத்தில் அது வீழ்ந்து விடுகிறது. ஜலதாரையானது உயரத்திலிருந்துபள்ளத்தை நாடிப் பாயும். தீயின் சுவாலைகள் மட்டுமே ஆழத்திலிருந்து மேல் நோக்கிச் செல்வன.

இக்காரணத்தினாலேயே நாம் 'ஞானாகினி' எனக் கூறுகிறோம். அதாவது மெய்ப்பொருளை உணரும் அறிவாகிய தீ ஆகாயம் போல் அகன்ற பசியும், ஊசிக் கண்போல் ஒடுங்கிய தொண்டையும் (குரல்வளையும்) கொண்டிருப்பதால் தான் மனிதன் துன்பமுறுகிறான். அவனுடைய தொண்டை உலகம் போலப் பெரிதாக வேண்டும். 'சாந்தி' மூலமும் சஹன்மூலமும் அதாவது சமநிலை, தைரியம் ஆகியவை மூலம் அவனுடையஇருதயம் அகன்று மலரவேண்டும். அப்போதுநித்தியமான உறுதியான ஆனந்தத்தைப் பெற வேண்டுமென்ற மனிதனுடைய ஆசை நிறைவேறும்.

நன்றி.

நாவாந்த நற்சிந்தனை

## அறுபத்து மூவர் மடத்தில் அன்னதானம்

கந்தசஷ்டி விரதத்தை முன்னிட்டு இன்று வியாழக்கிழமை காலை 7.00 மணிககு நல்லூர் தேரடியில் அமைந்துள்ள அறுபத்து மூன்று நாயன்மார் குருபூஜை மடத்தில் அடியார்களுககு அன்னதானம் வழங்கபபடவுள்ளது. (செ)

## மூன்றாவது கிறிஸ்தவ பத்திரிகை

(யாழ்ப்பாணம்)

யாழ் நகரில் தெளிவு என்ற மூன்றாவதுகிறிஸ்தவ பத்திரிகைஉதயமாகியுளளதுஇன்று யாழ்ப்பாணத்தில்வெளிவரும் தமிழ் கிறிஸ்தவ பததிரிகைகளில் உதயதாரகை, சத்தியவேத பாதுகாவலன் என்பனவற்றோடு இலங்கை திருச்சபையினால் வெளியிடப்படும் மூன்றாவது தமிழ் கிறிஸ்தவ பத்திரிகையாக தெளிவு விளங்குகின்றது.

நல்லூர்சென்ஜேம்ஸ்தேவாலயத்தினால் அச்சிட்டு வெளியிடப்படும் தெளிவின் ஐப்பசி கார்த்திகை வெளியீடு வெளிவந்துளளது. (உ-106)

# இராசி பலன்

22- 11- 2001
கார்த்திகை 7
ஸப்தமி பி ப. 4 24
அவிட்டம் வைகறை 5. 29
ராகுகாலம் 1. 40- 3. 10
சுபநேரம் 7 40- 9. 10
சித்தம்

**மேடம்**
கலந்துரையாடல், நல்ல செய்தி, காரிய அனுகூலம்.

**இடபம்**
கட்டுப்பாடு, உடல்உழைப்பு, ரோகம், பிரயாணம்.

**மிதுனம்**
உறவினர் மனஸ்தாபம், காரிய தாமதம், மனக்கிலேசம், திடீர் நன்மை.

**கடகம்**
பொருட்சேர்க்கை, சென்ற இடத்தில் செல்வாக்கு, வாகன வசதி, தொழில் நன்மை.

**சிங்கம்**
செய் தொழில் விருத்தி, வாய்ப்பதிகாரம், காரிய நன்மை சுவழ்வு.

**கன்னி**
குடும்ப சுகம், சொத்துப் பிரச்சினை, காரிய தாமதம், தனவரவு.

**துலாம்**
தாய்வழி உறவு, கல்விச் சிறப்பு, உடல்நலக்குறைவு, அர்ப்பர் நேசம்.

**விருச்சிகம்**
நலல சமபவம், பிரயாணம், அந்நியர் சந்திபபு, காரிய அனுகூலம.

**தனுசு**
குடுமப சுகம், போசன நனமை, சயனசுகக் குறைவு, முயற்சி தாமதம்.

**மகரம்**
எதிர்பாராத நன்மை, நல்ல முயற்சி, வியாதி குணமடைதல, முயற்சி கைகூடும்.

**கும்பம்**
வீண் அலைச்சல், முயற்சி பலிதம், தர்மம், பணச் செலவு

**மீனம்**
தனலாபம், தொழில் சிந்தை, பெரியோர் மதிபபு, காரியம கைகூடும்

(பழைய நேரப்படி கணிப்பிடபபட்டது)

வளவன்

## வாராந்த நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம)

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவக்கலை பண்பாட்டுப பேரவையினரின் வாராந்த நிகழ்வுகளில நாளை வெள்ளிக்கிழமை மு.ப.10.30 மணிக்கு வட்டு யாழ்ப்பாணக் கல்லூரிவிரிவுரையாளர் பொ அருமைநாதனின அறிமுகவுரையைத தொடர்ந்து ''கடவுள வடிவம்'' என்னும் தலைபபில் வட்டு யாழ்ப்பாணக் கல்லூரி விரிவுரையாளர் அ. குமாரவேல் சொற்பொழிவாற்றவுளளார். (செ)

## கூடைப்பந்தாட்ட சுற்றுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

ஹற்றன் நஷனல் வங்கியின் ஆதரவுடன் யாழ் மாவட்டக் கூடைப்பந்தாட்ட சங்கம் கழகங்கள், பாடசாலைகளுக்கிடையில் நடத்தும் கூடைப் பந்தாட்டப் போட்டியில் இன்று யாழ் வேம்படிமகளிர் கல்லூரியில்மோதவுள்ள அணிகளின் விபரம் வருமாறு;

**பெண்கள் அணி**

பி.ப 3.30 மணிக்கு பல்கலைக்கழகஅணியைஎதிர்த்து அரியாலை விளையாட்டுக்கழகமும்,

**ஆண்கள் அணி**

பி.ப. 4.15 மணிக்கு பல்கலைக்கழக கோல்ட் அணியை எதிர்த்து யாழ்ப்பாணபுல்ஸ் அணியும் மோதவுள்ளன. [செ]

# பொருளாதாரத் தடையால்
# வன்னி மக்கள் பெரும் பாதிப்பு
## அருட்தந்தை கருணாரட்ணம் பேட்டி

(வவுனியா)

கிளிநொச்சி பிரஜைகள் குழு இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிப்பிரதேசத்தில் விதிக்கப்பட்டிருக்கும் பொருளாதாரத்தடை குறித்து; ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவுக்கு கடிதமொன்றை அனுப்பிவைத்துள்ளது.

இக்கடிதம் குறித்தும் வன்னிமக்களின் நிலவரம் பற்றியும் பிரஜைகள் குழுத்தலைவர் அருட்தந்தை கர்ணாரட்ணம் லண்டன் பி. பி சி. வானொலிக்கு பேட்டியளித்துள்ளார்.

அப்பேட்டியில் அவர் தெரிவித்திருப்பதாவது

வன்னி மக்களின் வாழ்வியல் நிலை மிகவும் கஸ்ரமானதாகவே உள்ளது அரைவாசிக்கு மேற்பட்ட மக்களுக்கு நிவாரண உணவுப்பொருட்கள் கிடைப்பதில்லை கிடைக்கும் பொருட்களும் தரமானவையாக இல்லை மக்கள் பிரயாணம் செய்ய போக்குவரத்து பிரச்சினை பெரும் சிக்கலாகவுள்ளதுஎரிபொருட் தட்டுப்பாடு வாகன உதிரிப் பாகங்கள் இன்மை போக்குவரத்தை பாதிப்பனவாக உள்ளன.

குழந்தைகள் கர்ப்பிணித் தாய்மார் போசாக்கின்மையால் பெரிதும் பாதிப்படைந்துள்ளனர்.

கல்வி நிலைமையைப்பொறுத்தவரை ஆசிரியர் பற்றாக்குறை பாடவசதியின்மை போதிய கட்டிட வசதிகள் காணப்படாமைபெரும்குறைபாடென அருட்தந்தை தெரிவித்துள்ளார். (இ)

### காயமடைந்தவர்

றுக்காலை மரண மடைந்துள்ளார்.

ஏறாவூரைச் சேர்ந்த செல்லத்தம்பி செல்வி [வயது30) என்பவரே மரணமடைந்தவராவார். (ந-4)

### புலிகளின்

விடுதலைப்புலி உறுப்பினர்கள் உயிரிழந்துள்ளனர்: என்றும் விசேட ஊடகத் தகவல் நிலையம் மேலும் தெரிவித்துள்ளது. [இ]

### புலிகளின்

கவும் அவரின் சட்டத்தரணி நீதிமன்றில் தெரிவித்தார்.

இச் சந்தர்ப்பத்தில் சட்டத்தரணியைஇடைமறித்து கருத்துக் கூறிய நீதியரசர் சரத் என் சில்வா விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனுக்குக் கூடப் பாதுகாப்புஇல்லையென்றும் தேர்தலில்போட்டியிடும் வேட்பாளர்கள் ஒவ்வொருவரும் தமக்குப் பாதுகாப்பு அச்சுறுத்தல் இருப்பதாக முறைப்பாடு செய்வது அர்த்தமற்ற செயல் என்றும் தெரிவித்துள்ளார். [இ]

### ஸ்ரான்லி

பதாவது:

யாழ்ப்பாணக் குடாநாட்டு மக்களின் கேள்விகளுக்கு ஜனாதிபதி சந்திரிகா பதிலளிக்கும் நிகழ்ச்சியில் கலந்து கொள்வதற்காக யாழ்ப்பாணம் ஸ்ரான்லிவீதியில்நேற்று நண்பகல் சுமார் 10ஆயிரத்துக்கும் அதிகமானவர்கள் திரண்டிருந்தனர் இச் சந்தர்ப்பத்தில் ஐ. தே. கட்சியின் தேர்தல் பிரசார பதாகைகளை தாங்கியபடி வந்தஊர்திகள் மக்கள் திரளை ஊடறுத்துச் செல்ல முயன்றன.

மகேஸ்வரனுக்கு ஆதரவான பிரசார பதாகைகளை தாங்கிய ஊர்திகளில் வந்தவர்கள் தூஷண வார்த்தைகளால் பொது மக்களைகடுமையாக ஏசியதுடன் வாள்களை எடுத்துதாக்கவும் முயன்றனர் இத் தருணத்தில் கூடியிருந்த பொதுமக்கள் மகேஸ்வரனின் குண்டர்கள் மீது தாக்குதல் நடத்தியதுடன் வாள்களையும் பறித்தெடுத்தனர்;

இச் சந்தர்ப்பத்தில் தலை

### கண்காட்சி இன்றும் நீடிப்பு

(யழ்ப்பாணம்)

இணுவில் மைக்லோடவைத்தியசாலையில் ஜெய்ப்பூர்செயற்கைக்கால் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் இடம்பெறும் கண்காட்சி இன்றும் இடம்பெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இன்று மு: ப: 10 மணி முதல்பி. ப. 4 மணி வரை இக் கண்காட்சி இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-106

### விசேட கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்ட கூடைப்பந்தாட்ட மத்தியஸ்தர்கள் சங்கத்தின் விசேட கூட்டம் இன்று மாலை 5.45 மணிக்கு யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளதால் அனைத்து மத்தியஸ்தர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு சங்கச் செயலாளர் எஸ். அகிலன் கேட்டுள்ளார்; (உ)

# மகேஸ்வரனின் ஆதரவாளர்கள் எமது ஆதரவாளர்களை தாக்கினர்
## வட்டு. சம்பவம் குறித்து ஈ.பி.டி.பி அறிக்கை

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டைப் பகுதியில் வீடுவீடாகச் சென்று தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டுக்கொண்டிருந்த போது தம்மீது ஐ. தே. கட்சியைச் சேர்ந்த மகேஸ்வரனுக்கு ஆதரவான குண்டர்களதாக்குதல் நடத்தியதாக ஈ. பி.டி பி. யினர்தெரிவித்துள்ளனர்,

இது தொடர்பாக ஈ. பி. டி. பியினர் விடுத்த பத்திரிகைக்குறிப்பில் மேலும் தெரிவித்திருப்பதாவது;

வட்டுக்கோட்டைப் பகுதியில் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்ட ஈ. பி. டி. பியின் ஆதரவாளர்கள் மீது மகேஸ்வரனுக்கு ஆதரவான குண்டர்கள் தாக்குதல் நடத்தியுள்ளனர், வட்டுக்கோட்டை தேர்தல் தொகுதியிலுள்ள சங்கரத்தைச் சந்திக்கு சமீபமாக வீடுவீடாக தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டிருந்த ஈ. பி. டி. பி ஆதரவாளர்கள் மற்றும் தொண்டர்களை நூற்றுக்கும் அதிகமான குண்டர்கள் திரண்டுவந்து தாக்கினர்.

இரும்புக் கம்பிகள், கத்திகள, வாள்கள் சகிதமாக நடத்திய தாக்குதலில் ஈ.பி. டி. பியின் உறுப்பினரான துரைராசா தமிழ்ராஜன் என்பவர் காயமடைந்துள்ளார்.

இதனையடுத்து அண்மையிலிருக்கும் படை முகாமிலிருந்து வந்தபடையினர்ஆகாயத்தைத்நோக்கித் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதையடுத்து மகேஸ்வரனின் குண்டர்கள் சிதறி ஓடினர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக யாழ்ப்பாணம் மற்றும் மானிப்பாய் பொலிஸ் நிலையத்திலும் முறைப்பாடுகள் பதிவுசெய்யப்பட்டுள்ளன.

காயமடைந்த ஈ பி டி பி. தொண்டர் யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுளளார் என்றும் அச்செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

யிட்ட ஈ.பி.டி.பியின் தொண்டர்கள் பொதுமக்களை சாந்தப்படுத்தியதுடன் மகேஸ்வரனுக்கு சார்பான குண்டர்களின் அத்து மீறிய அடாவடித்தனங்கள தொடர்பாக யாழ் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர் பொது மக்களால்பறித்தெடுக்கப்பட்ட வாள்கள் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது. [ந]

### தமிழ் மக்கள்

ஆண்டுக்குப் பின்னர் யாழ் குடாநாட்டில் பல்வேறுஅபிவிருத்தித் திட்டங்கள் பொது ஜன ஐக்கிய முன்னணி அரசினால் நிறைவேற்றப்பட்டுள்ளன. இங்குள்ள மக்களுக்கு கல்வி, மற்றும் வேலைவாய்ப்பை வழங்கியுள்ளது.

யாழ் குடாநாட்டை அபிவிருத்தி செய்வதற்கான பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா முன்னிலைப்படுத்தி அரசிடம் சமர்ப்பித்துள்ளார். இந்த அபிவிருத்தித் திட்டங்களுக்கு ஏற்ப வேலைவாய்ப்புத் திட்டங்களை உருவாக்கி அமுல் செய்வதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பெருந்தொகையானபணத்தை முதலீடு செய்து பாரிய அபிவிருத்தித் திட்டங்களையும் அரசு முன்னெடுத்துச் செல்லவுள்ளது இத் திட்டங்கள் யாவும் வெற்றி பெறுவதற்கு மக்களின் பங்களிப்பு மிகவும் அவசியமாகும்.

பொதுஜன ஐக்கிய முன்னணி அரசு பதவி வகித்த கடந்த ஏழாண்டு காலத்தில் இனப் பிரச்சினைக்குரிய அரசியல் தீர்வைக்காண்பதற்குப் பல முயற்சிகள் எடுக்கப் பட்டுள்ளது.

வடக்குக் கிழக்கு மக்களின் அரசியல் பிரச்சினையைத் தீர்ப்பதற்குரிய வழிவகைகள் அமைத்துக் கொடுக்கப்படும் என்றும் ஜனாதிபதி சந்திரிகா உறுதி அளித்துள்ளார். (வ)

### நவ, 30 வரை

தகதி கும்பராசிக்கு செல்கிறது. நவம்பர் 29ஆம்திகதி வெள்ளி 10ஆம் வீடிற்கும் டிசம்பர் 21இல் 11ஆம் ராசிக்கும் செல்கிறது;

இதனால் எதிர்க்கட்சிக்கு சாதகமான பலன்கள் விளையும. ஜனவரியில் யுரேனஸ் கும்பராசிக்கு சென்றதும் ஒரு புதியயுகம் பிறக்கும், உண்மை, நீதி, சுதந்திரம், சமத்துவம் என்பன ஏற்படும் ஜனவரி 10 திகதி செவ்வாய் கும்பராசியிலிருந்து வெளியேறியபின்னரே கலவரம் அடங்கும், இதுபோன்றதொரு கிரகநிலை அமெரிக்க பிரான்சு, புரட்சிக்காலங்களில் இருந்துளளது என்றும் சோதிடர் தெரிவித்துள்ளார்

இதேவேளை இறஹண்ட என்னும் சோதிடப்பத்திரிகையின் ஆசிரியர்கள் நேற்று பகிரங்கமானகருத்துமோதலை முன்வைத்தனர் அதன் ஆசிரியர் ஜயசிங்க தனது பிரதம ஆசிரியர் ரத்னாயக்க அரசாங்கத்திற்குச் சார்பாகவே எதிர்வுகூறுகின்றார்: ஆனால் கிரகநிலையின்படி எதிர்க்கட்சிக்கே வாய்ப்புகள் உள்ளன எனக் குற்றம் சாட்டினார். இனிமேல் அப்பத்திரிகையில் தான் எழுதப் போவதில்லை எனகூறி அவர் இராஜினாமா செய்துள்ளார். பிரதம ஆசிரியர் ரத்னாயக்க பொ ஜ. மு. வெற்றிபெறும் எனதெரிவித்தார். இவர் அரசகூட்டுத்தாபனம் ஒன்றின் தலைமைப் பதவியை வகித்தவர் என்பது குறிப்பிடத்தக்கது; (ந)


## 5ஆம் ஆண்டு நீங்காத நினைவலைகள்

அன்னையின் மடியில் 09 | 11 | 1980



ஆண்டவன் அடியில் 17 | 11 | 1996

செல்வி

நிரஞ்சலா முத்துலிங்கம் (வவா)

(யாழ். வேம்படி மகளிர் கல்லூரி மாணவி)

திதி: 22 - 11 - 2001

நெஞ்சினிலே நினைவெதற்கு நித்தமும் உன்னை நினைப்பதற்கு
ஈருயிர் என்று இருக்கையிலே ஒருயிர் நீயும் மறந்ததென்ன
ஒருயிர் நீ இன்று இருந்துவிட்டால் ஓடி- மறைந்திடும் கவலை எல்லாம்
பாவிகளாய் இன்று வாடுகின்றோம் பாலகிநீயும் எங்களை மறந்ததென்ன
உன் ஆத்மா சாந்தியடைய வேண்டிநிற்கும்

ஆறுகால் மடம்,
ஆனைக்கோட்டை:
(3990)

பெற்றோர்,
அத்தான், அக்கா,
உற்றார், உறவினர்கள்



## ஐக்கிய தேசியக் கட்சி
### யாழ். மாவட்டம்
### கொள்கை விளக்கமும் மாபெரும் பிரசாரக் கூட்டமும்

இடம்:- நெல்லியடி தடங்கன் புளியடி முருகமூர்த்தி ஆலய முன்றலில்

காலம்:- 22-11-2001 இன்று பி.ப 4 மணி

தலைமை

**திரு . சி . கணபதிப்பிள்ளை**

ஐ, தே, கட்சி உடுப்பிட்டி தொகுதி வேட்பாளர்

சிறப்புரை

**திரு. தி. மகேஸ்வரன்**

ஐ தே.கட்சியின் யாழ் மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் முதன்மை வேட்பாளரும்



X

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

(கி-2905)

ஐக்கிய தேசியக் கட்சி
யாழ். மாவட்டம்


இப்பத்திரிகை; வலம்புரி'' அன் கோ ஸ்தாபனத்தாரால் இல. 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2001 நவம்பர் 22ஆம்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது;